பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 02 வியாழக்கிழமை (14.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 80

# தமிழருக்கு எதிரான கெடுபிடிகளை ஆராய விசேட குழு அமைக்க உத்தரவு

## உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்குப் பணிப்பு

கொழும்பு,பெப்ரவரி 14

**தலைநகர் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கெடுபிடிகள் - கொடுமைகள் - குறித்து ஆராய்வதற்கு விசேட உயர்மட்டக்குழு ஒன்றை நியமிக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபரை உயர்நீதிமன்றம் நேற்றுப் பணித்தது.**

தலைநகரிலும், சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் முறையற்ற விதத்தில் கைது செய்யப்பட்டு இம்சைப்படுத்தப்படுவதை ஆட்சேபித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் நந்தன சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, அன்ரூ சோமவன்ஸ ஆகியோரைக்கொண்ட ஆயத்தின் முன்பாக இந்த மனு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸ் பிரிவுகளின் தன்னிச்சையான செயற்பாடு

கொழும்பில் தமிழர்களைக் கைது செய்வது, அவர்களுக்கு எதிரான கெடுபிடிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிளைமோரில் இரு சிப்பாய்கள் மரணம்

வவுனியா, பூவரசங்குளம் - செட்டிக்குளம் வீதியில் உள்ள தட்டான் குளம் பகுதியில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீது நேற்றுக்காலை 7.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு படைச்சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இந்தச் சிப்பாய்கள் இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## கொழும்பில் தமிழர் தங்கியிருக்க விஸா வழங்குகின்றதாம் மருதானைப் பொலிஸ்!

### உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடு

கொழும்பு, பெப்.14

''தமிழர்கள் கொழும்பில் தங்கியிருப்பதற்கு 'விஸா' போன்ற ஓர் அனுமதியை மருதானைப் பொலிஸார் வழங்குகின்றனர். அந்த 'விஸா' அனுமதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலம் கடந்த பின்னர் கொழும்பில் தங்கியிருப்போர் கைதுசெய்யப்படுகின்றனர்.''

- இவ்வாறு நேற்று உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மனுதாரர் தரப்பின் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இத்தகவலை நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

''மருதானைப் பகுதியில் தங்கியுள்ள தமிழர்களுக்கு அப்பகுதிப் பொலிஸார், அப்பிரஜைகளின் படம் ஒட்டப்பட்ட விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு ஜனகபுரத்தில் தொடர்ந்தும் மோதல்

கிளிநொச்சி, பெப். 14

மணலாறு ஜனகபுரப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி முன்நகர்வினை மேற்கொண்டிருக்கும் படையினருக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிர முறியடிப்புத் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனகபுரம் பகுதியில் இருந்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அரச படையினர் இந்த முன்நகர்வு நடவடிக்கையினை மேற்கொண்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் படைத் தரப்பினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் உள்ள பாலைக்குழிப் பகுதியில் படையினரின் முன்நகர்வுத் தாக்குதல் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 28 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

செறிவான பல்குழல் ஷெல் வீச்சுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் அமைப்புகளை கடுமையாகக் காய்கின்றது அரசு!

### புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றனவாம்

கொழும்பு,பெப்,14

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் பொதுமக்கள் மீது புலிகள் நடத்தியவை என்று கூறப்படும் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் எவற்றையும் மனித உரிமைகள் பற்றிப் பேசும் சர்வதேச மற்றும் உயர்தர அமைப்புகள் எவையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டியை நோக்கியதான ஒரு தீர்வே தேவை; 13ஆவது திருத்தம் நிராகரிக்கப்பட்ட ஒன்று

### அமெரிக்கத் தூதரிடம் கூட்டமைப்பு

கொழும்பு,பெப்.14

இனப்பிரச்சினையைமுடிவுக்குக்கொண்டு வருவதற்கு சமஷ்டியை நோக்கியதான தீர்வையே அரசு முன்வைக்கவேண்டும். அது இப்போது அறிவித்துள்ள 13 ஆவது திருத்தச் சட்டம், 20 வருடங்களுக்கு முன்னரே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்று எடுத்துக் கூறினர்.

வடக்கு, கிழக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அரச விமானப்படையினர் நடத்தும் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் பொதுமக்களும் மாணவர்களுமே பாதிக்கப்படுகின்றனர் என்றும் கூட்டமைப்பின் தூதுக்குழுவினர் அமெரிக்கத் தூதுவரிடம் சுட்டிக்காட்டினார்

அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலனறுவையில் 15 தமிழர்கள் கைது!

கொழும்பு, பெப். 14

பொலனறுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் 19 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 15 தமிழர்களும், மூன்று முஸ்லிம்களும் ஒரு சிங்களவரும் அடங்குவர். வடக்கு, கிழக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வில் இலங்கை அரசு அடம்பிடித்தால் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகையை நீக்கவேண்டும்

### ஜேர்மன் அமைச்சர் வலியுறுத்துகிறார்

கொழும்பு, பெப்.14

இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே சாத்தியமென இலங்கை அரசு தொடர்ந்தும் அடம்பிடிக்குமானால் அந்த நாட்டிற்கான விசேட பொருளாதார சலுகைகளை விலக்கிக் கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை கேட்கப்போவதாக ஜேர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ஹெய்டி மேரி விஸோரக் ஸியோல் அம்மையார் தெரிவித்துள்ளார். இலங்கை விவகாரம் குறித்து ஐ.நா.பாதுகாப்பு சபை ஆராய வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துள்ளதால் சர்வதேச சமூகம் செயற்படுவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர் இலங்கையிலுள்ள ஜேர்மன் அபிவிருத்தி வங்கி பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:- இலங்கை இனப்பிரச்சினையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பெண் உதவி லிகிதர் தேவை

ஓர் ஆரோக்கியமான பெண் உதவி லிகிதர் தேவை. வயது 18 க்கும் 65 க்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும். தன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப் படிவம் எழுதி, உண்மையான தன் தகுதிகளின் பிரதிகளை இணைத்து, வேலை செய்திருந்தால் அதன் சான்றுப்பிரதிகளையும், உடல் ஆரோக்கியம் குறித்த சான்றிதழ் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டுக்குக் குறையாமல் இணைத்து, தொடர்பு கொள்ளத்தக்க தொ.பே இருந்தால் அந்த எண்ணுடன் அல்லது எண் களுடன் விண்ணப்பங்களை தபாலில் மட்டும் எழுதி The Manager, P.G.R., Kottawathai, Karanavai North, V.V.T. என்ற முகவரிக்கு அனுப்புக.

\- முகாமையாளர்


## காணவில்லை



சித்தியம்புளியடி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை என்னும் முகவரியைச் சேர்ந்த

**முருகன் பூபாலன்**

(மேசன் தொழிலாளி, வயது 49) என்பவரை 11.02.2008 முதல் காணவில்லை. 11.02.2008 காலை வேலைக்கு சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி பூபாலன் புஸ்பலதா.
T.P 0602214132
0602214133

சித்தியம்புளியடி,
தெல்லிப்பழை கிழக்கு (71133)


இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதேசரீதியாக காப்புறுதி அதிகாரிகளை நியமிக்கவுள்ளது - 2008

## மாபெரும் வேலைவாய்ப்பு

*A/L முடிந்துவிட்டதா? தொழில்வாய்ப்பு இல்லை என்ற கவலையா? வாழ்க்கையில் எப்படி முன்னேறுவது என்ற ஏக்கமா? 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.*



சீனப் பெருஞ்சுவரில் பொது முகாமையாளர், பிராந்திய முகாமையாளருடன் உத்தியோகத்தர்கள்.

- அதிஉயர் சம்பளம் பெறும் அரியவாய்ப்பு
- வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அரிய வாய்ப்பு
- திறமைக்கேற்ற பதவி உயர்வுகள்
- மோட்டார்சைக்கிள், கார் போன்ற வாகனவசதிகள்
- வருடா, வருடம் தங்கப்பதக்கங்களை வெல்லும் அரிய வாய்ப்பு
- வருடா, வருடம் கொழும்பில் நட்சத்திர ஹோட்டல்களில் உங்களுக்கான உயர் விருதுகள்
- O/L பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும் விசேட வேலை வாய்ப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது அவர்களும் நேர்முகத்தேர்விற்கு தோற்றலாம்.

நேர்முகத்தேர்வு :- 18.02.2008
திங்கட்கிழமை காலை 9.00 மணி
தொடக்கம் 2 மணி வரை.

G.SRIVARATHAN
(ASSISTANT AGENCY
DEVELOPMENT MANAGER)

(சி/551453)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பு சோமசுந்தரம்

(இளைப்பாறிய ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் (M L T)



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு சோமசுந்தரம் கொழும்பில் 12.02.2008 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பு (இளைப்பாறிய தபால் அதிபர் J.P ) - காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், மகேஸ்வரியின் சகோதரனும், தவமணிதேவியின் அன்புக்கணவரும் Dr.கலைச்செல்வி (U.K), Dr.நளாயினி (Australia), Dr.பகவதி (Castle Street Womens Hospital) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளீதரன் (Uk), சுகிர்தன் (Australia) ஆகியோரின் மாமனும் கிருஷ்ணனின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் இன்று (14.02.20008) வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*B 45 1/3, அரச தொடர்மாடி,*
*மாளிகாவத்தை,*
*கொழும்பு - 10.*
*தொ.பே. 011 2386979*

(சி/551457)

தகவல்:
Dr.பகவதி (மகள்)

## புங்குடுதீவுக்கு மின் வழங்க புதிய மின்பிறப்பாக்கி

யாழ்ப்பாணம்,பெப்.14

புங்குடுதீவுப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கென மின்பிறப்பாக்கி யொன்று நேற்றுப் புதன்கிழமை அங்கு எடுத்துச் செல்லப்பட்டதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மின்பிறப்பாக்கி மூலம் விரைவில் புங்குடுதீவுப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

புங்குடுதீவுப் பகுதியில் தற்போது 25 குடியிருப்பாளர்களே மின் இணைப்பினைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் ஏனையோரும் விண்ணப்பித் தாலே மின் விநியோகத்தை ஆரம்பிக்க முடியும் எனவும் மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50)

## மென்வன்மைப் போட்டி

குருநகர்,பெப்.14

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்லமென்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆயர் பி.தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் வடமாகாணத்துக்கான உதவிப் பிரதம முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும் யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் ஆர்.ஏ.திலகரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (1-51)

## தவறிவிட்டது

கணேசு பரமேஸ்வரி என்பவருடைய தே.அ. அட்டை (486193727v) நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 36/12, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே. 222 6913


## கோழிக்குஞ்சு விநியோகம்

Bahiraha புறொயிலர் குஞ்சுகள், Prima சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 15.02.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.



## சமையல் உதவியாளர் தேவை(பெண்)

உரும்பிராயில் இயங்கும் பெண்கள் இல்லமொன்றுக்கு பெண் சமையல் உதவியாளர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் அவசியமாகும். தொடர்புகளுக்கு : அ.ஈஸ்வரநாதன், அதிபர், உரும்பிராய் மேற்கு, தொலைபேசி எண் 6391


## கண்ணீர் அஞ்சலி



சங்கானை ப.நோ.கூ. சங்கப் பணியாளர்
கனகசபாபதி ஐயர்
யசோதரனின்
அன்புத் தாய்

**தேவமணி**

அவர்கள் காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

*சங்கானை ப.நோ.கூ.ச.*
*பணியாளர்*
*சி.சே.க.கூ.சங்கம்.*

(A)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

959 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கன்னி **18 33 46 51**

12-02-2008

· செல்லுபடியாகும் தொடர் இல. 4611335 - 4626831

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,987 | 10/- | 3,389,870/- |
| 2 இலக்கங்கள் | 31,141 | 20/- | 622,820/- |
| 1 இல. + லக்கினம் | 30,869 | 30/- | 926,070/- |
| 2 இல. + லக்கினம் | 2,842 | 100/- | 284,200/- |
| 3 இலக்கங்கள் | 832 | 500/- | 416,000/- |
| 3 இல. + லக்கினம் | 65 | 5,000/- | 325,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,463,960/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 404,746 | | 7,487,460/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,757,250/-

தொடர் இல. 5508244 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 பெப்ரவரி 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 4624242-0-48 |
| மாத்தறை | 4613265-0-41 |
| குருநாகல் | 4614566-7-44 |
| இரத்தினபுரி | 4611631-7-94 |
| கொழும்பு | 4625985-5-16 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

### பொது முகாமையாளர் பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத் திட்டம்:- 11450 - 14500 / 145X10 - 160X10 (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 66/2006 இன் படி)
02. சம்பள குறியீட்டு இல :- 101 டி(7) (165/88)
03. வயது :- 25 தொடக்கம் 50 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
04. விண்ணப்ப முடிவு திகதி:- 23.02.2008
05. பிணை :- ரொக்கம் 25, 000/- ஆதனம் 50, 000/-
06. 1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    2. சங்கத்தில் 10/- செலுத்திப் பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
    3. கணனி அறிவும், திறனும் அவசியமாக இருத்தல் வேண்டும்.
    4. மேலதிக விவரங்களை சங்கப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.
07. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-
    அ) கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் 3வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்டப் பதவி ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

    அல்லது

    ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

    அல்லது

    இ) கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திரம் உயர்தரச் சான்றிதழ்/ க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் எட்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
08. நிபந்தனைகள்:-
    அ) நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.
    ஆ) விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களில் பிரதி என்பன இணைக்கப்பட வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்களும், சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமை உண்டு.
09. விண்ணப்பங்கள் "தலைவர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) பருத்தித்துறை வீதி, கொடிகாமம்" என்ற முகவரிக்கு "பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

(சி/551455)

தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பயன்தரும் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.14

வடபகுதியில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கான பயன்தரு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

எனவே இதற்கான வாழ்வாதாரத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்து பிராந்தியத்தில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கு வழங்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் உள்ளூராட்சி சபைகளை கடிதமூலம் கோரியுள்ளார்.

பிராந்திய மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உள்ளூராட்சி சபை செயலாளர்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களை இதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (203-95)

## மகேஸ்வரன் எம்.பிக்கு காரைநகரில் நினைவுப் பூசை

யாழ்ப்பாணம்,பெப்.14

ஜனவரி முதலாம் திகதி கொழும்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரனின் 45ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான காரைநகரில் ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று விசேட பூசை வழிபாடுகளும் பஜனையும் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் ஆலய அறப்பணி நிலையத்தில் அன்னதானமும் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன. (203-250)

## முகாமைத்துவ உதவியாளர் எட்டுப் பேருக்குப் பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.மாவட்டத் திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் வகுப்பு-Iஐச் சேர்ந்த எட்டு பொதுமுகாமைத்துவ உதவியாளர்கள் அதி சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

பதவி உயர்வு பெற்றவர்களில் ஏழு பேர் யாழ்.மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கு நிர்வாக உத்தியோகத்தர்களாக யாழ்.செயலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# அரச ஊழியர்களிடையே கலாசார அமைச்சின் 2008ஆம் ஆண்டுக்கான ஆக்கத்திறன் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.14

கலாசார அலுவல்கள் அமைச்சு அரச ஊழியர்களுக்கிடையிலான 2008ஆம் ஆண்டுக்கான ஆக்கத்திறன் போட்டியினை நடத்தவுள்ளது.

அரச மற்றும் அரசுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களில் கடமை புரியும் இலக்கிய, கலைத்துறையில் ஆர்வமுள்ள ஊழியர்களது ஆக்கத்திறனை வெளிக்கொணரும் பொருட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிங்கள, தமிழ் மொழிகளிலான சிறுகதைகள், பாடல்கள், கவிதைகள், சிறுவர் கதைகள் மற்றும் குறுநாடகங்கள் ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறுகதை ஆகக்கூடியது ஆயிரத்து 500 சொற்களுக்கு மேற்படாமலும் அல்லது 16 பக்கங்களுக்கு மேற்படாமலும் பாடல் மூன்றரை நிமிடங்களை உள்ளடக்குவதுடன் இசை நயத்துடன் கூடிய வகையிலும் இருத்தல்வேண்டும்.

கவிதை ஆகக்கூடியது 10 செய்யுள் பகுதிகளையும் சிறுவர் கதை பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் பொருத்தமான விடயத்தை இலகுவான மொழி நடையில் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

குறுநாடகம் (கையெழுத்துப் பிரதி) ஆகக்கூடியது 45 நிமிட காலவரையறையினைக் கொண்டிருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், கலாசார அலுவல்கள் அமைச்சு, எட்டாம் மாடி, செச்சிறிபாய, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 83ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தினரால் அரிமாக் கழகச் சின்னம் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். தெல்லிப்பழை லயன்ஸ் கழகத் தலைவர் பொ.சுந்தரலிங்கம், பணிப்பாளர் வீ.கமலநாதன் ஆகியோர் இணைந்து இதனை வழங்கியுள்ளனர். (203)

## வேம்படி மகளிர் கல்லூரியில் கணனிப் பயிற்சிக்கூடம்

யாழ்ப்பாணம்,பெப்.14

வேம்படி மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. சாதாரணம் மற்றும் ஜி.சீ.ஈ உயர்தரம் ஆகிய வகுப்புகளில் தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்று வரும் மாணவர்களது கணனி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் கணனிப் பயிற்சிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பழைய மாணவர் சங்கம் இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் பாடசாலையின் ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தர வகுப்புகளில் 700இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தகவல் தொழில்நுட்பப் பாடத்தை ஒரு பாடமாகக் கற்று வருகின்றார்கள்.

இவர்களின் தேவைக்கென 14 கணனிகள் உள்ளபோதிலும் அவை போதியனவாக இல்லை எனவும் மேலும் கணனிகளை கொள்வனவு செய்யும் நோக்குடன் கிளைச் சங்கங்களினூடாகவும் நலன் விரும்பிகளினூடாகவும் நிதி திரட்டப்பட்டு வருவதாகவும் பழைய மாணவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (203-300)

# திட்டமிடற் பிரிவுகளுக்குத் தேவையான பௌதீக வளங்களின் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம்,பெப்.14

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் திட்டமிடற் பிரிவுகளுக்குத் தேவையான பௌதீக வளங்களின் விவரம் திரட்டப்படவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அதன் முதற்கட்டமாக உள்ளூர் மட்டத்திலான அபிவிருத்தி வேலைகளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த உள்ளூராட்சி மன்றங்களில் திட்டமிடல் அலகுகளை தாபிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருப்பின் திட்டமிடல் அலகுகளுக்குத் தேவையான பௌதீக வளங்கள் பற்றிய விவரங்களைத் திட்டமிடற் பிரிவு அலுவலர்கள் வழங்கலாம்.

அத்துடன் திட்டமிடற் பிரிவின் கீழ் கடமையாற்றும் அலுவலர்களின் விவரங்களும் கோரப்பட்டுள்ளன. (203-95)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு 30 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம்

பருத்தித்துறை, பெப்.14

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மாடிக்கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆரம்பமாக புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று அங்கிருந்து சுவாமிப் படங்கள் எடுத்துவரப்பட்டு வைக்கப்பட்டன. தொடர்ந்து பால் காய்ச்சும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே. கணேஷ், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி உட்பட மற்றும் பலர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

தற்போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் இப்பிரதேச செயலகத்தை விரைவில் புதிய கட்டடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார். (203-218)

## நடனப் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகத்தினரின் அனுசரணையுடன் இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சாயிநர்த்தன கேந்ரா நடனப் பயிற்சி நிலையத்தில் நடனப் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

சென்னை அடையாறு கலாக்ஷேத்திர பட்டதாரியான செல்வி பிரசாந்தி யோகராஜாவால் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

ஆர்வலர்களைப் பதிவு செய்யுமாறு றோட்டறிக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (203)-

# புனர்நிர்மாண வேலைகளுக்கு மணல் விநியோகம் செய்வதில் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.மாவட்டத்தில் புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகளுக்கான மணல் விநியோகம் தொடர்பாக புதிய நடைமுறை ஒன்றை அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

அதன்படி, புனர்வாழ்வுப் பணிகளுக்கு மணல் பெறுவதற்காக மாவட்ட செயலகத்தால் திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணிப்பாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் முழு மணலும் பெறப்பட்ட பின்னர் பிரதேச செயலர் ஊடாக மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஏனைய பொது அமைப்புகள் யாழ்.செயலக மணல் அனுமதிப்பத்திரப் பிரிவுக்கு நேரடியாக அனுமதிப் பத்திரங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச செயலாளர்கள், பிரதம பொறியியலாளர்கள், உள்ளூராட்சி சபையினர், அரசசார்பற்ற நிறுவனத்தினர் ஆகியோருக்கு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை - மணலுக்குப் புதிய அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள் முன்னர் அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பின் அவற்றைச் சமர்ப்பித்தே பெறமுடியும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (203-95)

## நுளம்பு வலைகள் வழங்கப்படுகின்றன

நவாலி,பெப்.14

நவாலியில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமசேவகர் பிரிவு ரீதியாக பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் இவற்றை வழங்கி வருகின்றனர். (203-200)

## காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் அறிவாலயம் அமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.14

காரைநகர், வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் கணபதீஸ்வரக் குருக்கள் அறிவாலயம் அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயகுரு கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்களின் தந்தையாரான கணபதீஸ்வரக் குருக்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்படும் இந்த நூலகத்திற்கு வைத்தீசுவரக் குருக்கள் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை வழங்கியுள்ளார்.

நவீன வசதிகளுடன் சுமார் நாற்பது லட்சம் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஐயனார் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (203-250)



நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் அண்மையில் தையல், மனையியல் கண்காட்சி நடத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் ச.வ.மோகன்றாஸ் மங்கள விளக்கேற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நீர்வேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் திரு. தியாகராசா மகேஸ்வரன்

(இந்து சமய விவகார முன்னாள் அமைச்சரும் யாழ்.மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்)

**அன்னை மடியில்: 10.01.1966** **இறைவன் அடியில்: 01.01.2008**

கடந்த 01.01.2008 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(14.02.2008) வியாழக்கிழமை காலை எமது இல்லத்திலும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் அறப்பணி நிலையத்திலும் இடம் பெறும்.

நாளை(15.02.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்திலும் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், பஜனையும், நினைவு மலர் வெளியீடும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அனைவரும் கலந்து கொள்ளவும்.

தகவல்: திருமதி. மகேஸ்வரன், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

| | | |
|---|---|---|
| 32, 36 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06. தொலைபேசி. 2360679. | 276, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். | சின்னாலடி, தங்கோடை, காரைநகர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த மாணவர்கள் உள்ளபோதும் கல்வியில் கூடிய கவனம் செலுத்தும் கோட்டைக்காடு தமிழ்க்கலவன் பாடசாலை


பாடசாலை அதிபர் திருச்சிற்றம்பலம் நவரத்தினம்

குடிமனைகள் நிறைந்த சுற்றாடலில் இப்பாடசாலை அமைந்துள்ளது. அப்படியிருந்தும் பிள்ளைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையிலும் தொடர்ந்து கல்விப் பணியை முன்னெடுத்துச் செல்கின்றது கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்தது இந்தப் பாடசாலை.

1961ஆம் ஆண்டு முன்னாள் உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தர்மலிங்கத்தின் உதவியுடன் அமரர் சுப்பிரமணியத்தினால் பொன் கந்தையா வித்தியாசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையின் அதிபர் திருச்சிற்றம்பலம் நவரத்தினம் பாடசாலையின் நிலை பற்றிக் கூறியதாவது:-

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மிகவும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

தற்போது 39 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். இவர்களில் 6 பிள்ளைகள் மாற்று வலுவுடைய பிள்ளைகளாக உள்ளனர்.

இந்தப் பிள்ளைகளில் ஒரு சில பிள்ளைகள் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளை சீராகப் பாடசாலைக்கு அனுப்புவதில் அக்கறை காட்டுவதில்லை.

அயல் பாடசாலைகள் கல்வித் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடிய பிள்ளைகளை நன்கொடைகளைப் பெற்று அனுமதித்துள்ளார்கள்.

இப்பாடசாலைகள் பெற்றோர்களிடம் இருந்து பெற்ற பணத்திலே சீருடைகள், பாடசாலை பைகள், காலணிகள் என்பவற்றை வழங்குகின்றன. இதனைப் பெற்றோர்கள் ஒரு கவர்ச்சியாக கருதி அத்தகைய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்கின்றார்கள்.

பாடசாலை அனுமதி விடயத்தில் கல்வித் திணைக்களம் தனது கவனத்தை செலுத்தினால் இத்தகைய பாடசாலைகளும் குறிப்பிட்டளவு மாணவர்களை பாடசாலையில் இணைத்துக் கொள்ள வழியேற்படும்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட சில காலத்தில் 600இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டிருந்தது. தரம் 1 முதல் தரம் 8 வரை வகுப்புக்களை கொண்டிருந்த இந்தப் பாடசாலையின் தரம் பின்னர் குறைக்கப்பட்டு தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களை நடத்த அனுமதிக்கப்பட்டிருந்தது.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் சுமார் 135 பிள்ளைகளை கொண்டிருந்த இப்பாடசாலை மீண்டும் 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது 86 பிள்ளைகள் கல்வி கற்றனர். தொடர்ந்து ஏனைய பாடசாலைகளும் படிப்படியாக இயங்கத் தொடங்கியதை அடுத்து இப்பாடசாலையில் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைந்தது.

பாடசாலையில் 3 ஆசிரியர்கள் உள்ளனர்.

## பாடசாலைகளில் மாணவர் அனுமதியில் கல்வித் திணைக்களத்தின் கவனம் அவசியம்

இவர்களில் இருவர் ஆரம்பக் கல்விக்கான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.

அரசின் கல்விக் கொள்கையின் படி பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றார்களேயன்றி வகுப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமனம் செய்யப்படுவதில்லை.

இதன் காரணமாக இரண்டு வகுப்புகளின் பிள்ளைகளை ஒரே வகுப்பில் வைத்து கற்பிக்கும் நிலை காணப்படுகின்றது. இதன் மூலம் பிள்ளைகளின் பாடவிதானங்கள் வகுப்புக்களுக்கு ஏற்ப முழுமையாக பூர்த்தி செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. இதனால் மாணவர்கள் பாதிப்படைகின்றார்கள் எனப் பெற்றோர்கள் கருதுகின்றார்கள். இதனால் இங்கு பிள்ளைகளைச் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் முன்வருவதில்லை - என்றார் அதிபர்.

கிராமப்புறத்தில் அமைந்துள்ள இப்பாடசாலைபற்றி அம்மக்கள் கொண்டுள்ள எண்ணம் தப்பானதெனக் கூறிவிடமுடியாது இரண்டு வகுப்புகளை ஒன்றாக வைத்து கற்பிப்பது என்பது மாணவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் எடுக்க வேண்டியது அவசியம்.

இப்பாடசாலையில் தரம் 1இற்கும் அனுமதி பெறும் பிள்ளைகளில் முன்பள்ளிக்கு செல்லாமலும் ஒழுங்காக எழுத்தைக் கற்காமலும் வரும் பிள்ளைகளும் அடங்குகின்றார்கள். இவர்களுக்கான எழுத்தறிவை முதலில் ஊட்ட வேண்டிய பாரிய பொறுப்பும் இப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கு இருந்து வருகின்றதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

**பவித்திரன் -**

இப்பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீரைக் கிணற்றில் இருந்து பெறுகின்றார்கள். பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாகக் கருத்துக் கூறுகையில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜ் இப் பாடசாலைக்கு நீர்த்தாங்கி கட்ட 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியிருந்தார்.

அவர் மரணமான பின்னர் பாடசாலைக்கு 75 ஆயிரம் ரூபா மட்டும்தான் கிடைத்தது. இந்த நிதிக் குறைப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி யாருக்கும் தெரியாது. தற்போது அதிபரின் முயற்சியினால் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு விட்டது. ஆனால் நீர் பெறுவதற்கு வேண்டிய குழாய்கள் இணைக்கப்படாமையால் மாணவர்கள் கிணற்றில் நீரை அள்ளியே பயன்படுத்தி வருகின்றார்கள்.

வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் குழாய்கள் பொருத்த ஒரு லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளார். ஏற்கனவே இருந்த தளபாடங்கள் திருத்தப்பட்டு மாணவர்களின் தேவைக்கு ஏற்ப பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

விளையாட்டு மைதானம் இல்லாத போதும் விளையாட்டுப்போட்டி நடைபெறுவதுடன் கோட்ட மட்டப் போட்டிகளிலும் மாணவர்கள் கலந்துகொண்டு வருகின்றார்கள்.

எனவே ஏனைய பாடசாலைகளைப் போன்று இந்தப் பாடசாலையும் ஓரளவு வசதி வாய்ப்புகளுடன் இயங்குவதற்குத் தேவையான உதவிகள் செய்துகொடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. *

# கல்வியின் மறுசீரமைப்பும் ஆசிரியர்களின் பங்களிப்பும்




**வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**
**(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.)**

இலங்கையில் இலவசக்கல்வி முறைமை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் நிறுவனங்கள் அனைத்திலும் பொதுவான பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அப்பாடத் திட்டங்களைப் பூர்த்தி செய்த மாணவர்கள் பொதுப்பரீட்சைகளுக்கு முகம் கொடுக்கும் நடைமுறைகாணப்படுகிறது. காலத்திற்குக் காலம் கல்வித் திட்டங்களிலும், பாடத்திட்டங்களிலும் மாற்றங்களும், மறுசீரமைப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கேற்ப ஆசிரியர்களும் தமது கற்பித்தல் நடைமுறைகளைமாற்றிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆசிரியர் ஒருவர் தனது பதவிக் காலத்தில் பல்வேறு முறையிலான கலைத்திட்ட மாற்றங்களுக்கு முகம் கொடுக்கிறார்.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் படி ஆசிரியர் ஒரு விநியோகஸ்தராக வடிவமைக்கப் பட்டுள்ளார். மாணவனுக்கு கல்வியை அல்லது அறிவை வழங்குபவராக அல்லது கொடுப்பவராக உள்ளார். அதனைப் பெறும் மாணவன் அதில் ஏற்படும் துலக்கல் காரணமாகத் தேடல் மூலம் கற்றலில் ஈடுபடும் போது ஆசிரியர் மாணவரிடையே கற்றல் பரிமாற்றம் இடம்பெறும். அவ்வேளையில் ஆசிரியர் ஒரு வளவாளராக மாறி தனது செயற்பாடுகளினூடாக மாணவனின் கல்வி வளத்தினை வளர்த்துச் செல்வார்.

மாணவனுக்கு ஆசிரியர் தனக்குத் தெரிந்தவற்றை கற்பித்தலின் மூலம் கல்வியைக் கடத்துபவராக உள்ளார். பரீட்சை மையக் கல்வியில் ஆசிரியரின் பங்களிப்பு மாணவனுக்கு முக்கியமானதாகின்றது. அவரது வழிகாட்டுதல் தனது பரீட்சை வெற்றியைத் தீர்மானிப்பதாக மாணவரின் சிந்தனை உள்ளது. இதில் கற்பித்தலானது கற்றலிலும் பார்க்க முன்னிலைப்படுத்தப்படுகிறது. பரீட்சை வினா ஒன்றிற்கு மாணவன் விடை அளிக்க முடியாத போது ஆசிரியர் கற்பிக்கவில்லை அல்லது அவர் கற்பித்தது விளங்கவில்லை, அதனால் விடையளிக்க முடியவில்லை என ஆசிரியர் மீது குற்றம் சுமத்தப்படுகிறதேயன்றி மாணவன் கற்கவில்லை என்பதும் மாணவன் தேடலில் ஆர்வம் காட்டவில்லை என்பதும் இரண்டாம் பட்சமாகின்றது.

எனவே மாணவனின் பரீட்சை என்ற இலக்கில் வெற்றி பெற ஆசிரியரின் கற்பித்தல் பங்களிப்பு மிக இன்றியமையாதென சமூகம் எதிர்பார்க்கின்றது. சமூகத்தின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ய வேண்டிய கடப்பாடு நிச்சயமாக ஆசிரியருக்குண்டு. ஒரு வகுப்பறையில் ஆசிரியருக்கு வழங்கப்பட்ட நேரத்தில் தனது சக்திக்கும் அதிகாரத்துக்கும் உரிய வகையில் மாணவரைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து கற்கத் தூண்டுவதில் நிறைவைப் பெறும் ஓர் ஆசிரியர் தன் சேவையில் பூரணத்துவம் அடைகிறார்.

இன்னமும் கரும்பலகையுடன் வெண்கட்டியுடனும் தம் கற்பித்தலை மட்டுப்படுத்தியுள்ள ஆசிரியர்களை நாம் காண்கிறோம். நவீன கற்பித்தல் சாதனங்களினூடான ஆசிரியப் பணியில் கரும்பலகையும் வெண்கட்டியும் மிகவும் பின்தள்ளப்பட்டு விட்டன. மாணவர்களின் சிந்தனையாற்றலை விருத்தி செய்ய,கற்றல் ஆர்வத்தை அதிகரிக்க, கல்வியில் தமது இலக்கினை நோக்கி முன் செல்ல, கற்பித்தல் நுட்பங்களின் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வகுப்பில் ஆசிரியர், மாணவர் தொடர்பு மேற்படுத்தப்படல் வேண்டும். மாணவரின் பங்குபற்றுதலுக்கு அதிக இடமளிக்கப்படல் வேண்டும். வெறுமனே செவிமடுப்பவராகவும், குறிப்பெடுப்பவராகவும் மாணவர் செயற்பட முடியாது. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மாணவர்களின் வகுப்றைப் பங்களிப்பினை அதிகரிக்கின்றன. சுயமாகவும், குழுவாகவும் மாணவர்கள் இயங்குவதற்கு ஆசிரியரின் வழிகாட்டுதல் தேவைப்படுகின்றது. கலந்துரையாடல்கள் ஆசிரியர்- மாணவருக்கிடையிலும், மாணவர் - மாணவருக்கிடையிலும் இடம்பெறவேண்டும். ஆசிரியர்களால் மாணவர்களிடம் குறித்த பாடப் பரப்புத் தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு அவர்கள் அளிக்கும் பதில்களினூடாக கற்பித்தல் செயற்பாடுமுன்கொண்டு செல்லப்படும். இதன் மூலம் மாணவர்கள் தெரிந்திருக்கும் விடயங்களை முன்னிலைப் படுத்தி தெரியாத விடயங்களைத் தெரிந்து கொள்ள அவர்கள் ஆர்வப்படுத்தப்படுவார்கள்.

ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடப் பரப்புக் குறித்து தெளிவான அறிவு கொண்டவராய் இருந்தாலே அவரது கற்பித்தல் நிறைவானதாய் இருக்கும். இதனால் கற்பித்தலுக்காக ஆசிரியர் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். ஆசிரியர் தம் வாண்மை விருத்தியில் கவனம் செலுத்தினால் காலத்துக்குக் காலம் மாறும் கல்வித் திட்டங்களுக்கு ஏற்ப தன் கற்பித்தலையும் சிறப்பாக முன்னெடுத்து நல்லாசிரியன் என்ற நிலைக்கு உயரலாம். இதன் மூலம் சமூகத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவராக ஆசிரியர் மிளிரலாம்.

எனவே மாணவரின் பலங்களைக் கண்டு அவற்றை மேம்படுத்துவதாகவும் பலவீனங்களை அறிந்து அவற்றை நீக்குவதாகவும் ஆசிரியரின் செயற்பாடுகள் அமைவதுடன் ஆளுமைப் பண்புகள், தீர்மானமெடுக்கும் திறன், ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவற் றில் மாணவன் மேன்நிலை அடைய ஆசிரியர்களின் பங்களிப்பினை மேலும் வலுவூட்டுவதாகவும் புதிய கல்விச் சீர்திருத்தச் செயற்பாடுகள் அமைகின்றன. *


இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய இல்ல மென்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷ் முதலாம் இடத்தைப் பெற்ற புனித ஹென்றியரசர் கல்லூரியின் றோஸ் இல்லத்துக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டு நீங்காத நெருடும் நினைவலைகள்!

## தீர்க்கசுமங்கலி

## திருமதி சர்வேஸ்வரன் கேதீஸ்வரி

## (கேசி)



உள்ளம் மகிழ தோற்றம்
14.03.1973

நெஞ்சம் நெகிழ மறைவு
15.01.2008

அன்புள்ள மகளாய் ஆசை மனைவியாய்
இன்ப வாழ்வில் அன்புத் தாயாய்
ஈகையில் சிறந்த இன்னுயிர்ச் சகோதரியாய்
உள்ளம் இனிக்கும் ஆருயிர்த் தோழியாய்
ஊரார் போற்றும் அன்புப் பெண்ணாய்
எப்போதும் சிரித்தமுகத்துடன் வளைய வருவாயே
ஏன் தான் எம்மை விட்டுப் பிரிந்தாயோ?
ஐங்கரன் பாதத்தில் அமைதிகொள்ள
ஒருமனதாகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்
ஓலமிட்டு அழுதாலும் நீ வரப்போவதில்லை?
ஔடதமாயிருந்து ஆறுதல் தந்த கேசி
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது உள்ளக் குமுறலில் பங்கேற்று எம்முடன் துயர் பகிர்ந்த அத்தனை அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் நினைவாக எமது இல்லத்தில் இன்று (14.02.2008) வியாழக்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அனைத்து அன்புள்ளங்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

சு.சர்வேஸ்வரன் (ஈசன்- கணவர்),
A.K.S.குடும்பத்தினர்,
திரு.திருமதி பஞ்சாட்சரம் (கடுக்கன்)
குடும்பத்தினர்.

489, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(71039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் கோட்ட வலைப்பந்தாட்டம்; கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு,பெப்.14

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

புத்தூர்-ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் தொடர்ச்சியாக ஆட்டம் முடிவடையும் வரை சளைக்காமல் மோதின. இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றமை பார்வையாளர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.

ஆட்டமுடிவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 20:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியை வெற்றிகொண்டு கோப்பாய் கோட்ட சம்பியனானது.

மூன்றாம் இடத்தை நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

17 வயதுப் பிரிவினருக்கான இப்போட்டியில் 13 பாடசாலைகளின் அணிகள் மோதிக்கொண்டன. (1-86)

# மாகாண மட்ட கிராமங்கள் ஊடான ஓட்டப் போட்டி யாழ்.வீர, வீராங்கனைகள் பங்குபற்றவில்லை

யாழ்ப்பாணம், பெப்.14

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கிராமங்கள் ஊடான ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குபற்றவில்லை.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளின் விவரங்கள் பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக விளையாட்டு அலுவலர்களால் சேகரிக்கப்பட்டிருந்தன.

இந்தப்போட்டிகள் கடந்த மாதம் மன்னாரில் இடம்பெற்று முடிவடைந்துள்ளன.

எனினும் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றவில்லை.

அங்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் இதன் காரணமாக தங்களால் போட்டியில் பங்குபற்றமுடியாமற் போயிற்று என்றும் வீர, வீராங்கனைகள் விசனம் தெரிவித்தனர்.




# மேசைப்பந்தாட்டப் போட்டியில் வலயச் சம்பியன் உடுவில் மகளிர்

வலி.வடக்கு, பெப்.14

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற மேசைப்பந்தாட்டம் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியனானது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று நேர் செற்றுக்கள் கொண்ட இப்போடடியில் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டடின.

முதல் இரண்டு சுற்றுக்களில் இரு கல்லூரிகளும் தலா ஒவ்வொரு செற்றுக்களை வென்று இறுதிச் சுற்றில் எந்த அணி வெற்றி பெறும் என்று தெரியாத அளவுக்கு இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக் கொண்டன.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 2:1 என்ற செற் கணக்கில் யூனியன் கல்லூரியை வெற்றிகொண்டு வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)

# உடுவில் மான்ஸ் சம்பியனானது வலிகாமம் வலய பூப்பந்தாட்டத்தில்

வலி.வடக்கு,பெப்.14

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் (Badminton) உடுவில் மான்ஸ் வித்தியாலயம் வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவானது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.


மூன்று நேர் செற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் செற்றுக்களை வென்று உடுவில் மான்ஸ் வெற்றி பெற்றது.

இரண்டு நேர் செற்றுக்களையும் முறையே 21:06, 21:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று செற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு செற்றுக்களில் இரு பாடசாலை அணிகளும் ஒவ்வொரு செற்றுக்களைப் பெற்றுக்கொண்டன.

தொடர்ந்து மூன்றாவது செற்றை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வென்று வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. (1-86)





சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யபப்ட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகமும் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக வீராங்கனைகளும் மைதானத்தில் மோதிக்கொள்வதையும் -

நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட பதில் விளையாட்டு அலுவலர் க.துரைசிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் மற்றும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றிய தெல்லிப்பழைப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கு.முகுந்தன், உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் செல்வி சி.மனோன்மணி, செல்வி தர்சினி ஆகியோருடன் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்ட இரு அணிகளின் வீராங்கனைகளும் படத்தில் காணப்படுகின்றனர். *(படங்கள்: நேசன்)*

# மெய்வன்மைப் போட்டிகள்

சுழிபுரம், பெப்.14

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (1-28)

* * *

சுழிபுரம்,பெப்.14

சுழிபுரம், திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு த.கடம்பானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய விசேட கல்வி அலகு முகாமையாளர் நி.முருகானந்தனும் சிறப்பு விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்ட அலுவலர் பி.செல்வரஜித்தும் கௌரவ விருந்தினராக பொன்னாலை கிராமசேவையாளர் இ.சிறீறஞ்சனும் கலந்து கொள்வர். (1-28)

* * *

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர் வரும் திங்கட்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (1-207)

# வலிகாமத்தில் இரு கழகங்களுக்கு தடைவிதிப்பு

வலி.வடக்கு,பெப்.14

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட இரு கழகங்களை இரண்டு வருட காலத்துக்கு இடைநிறுத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

லீக்கின் விசேட கூட்டத்தில் இரு கழகங்களுக்கும் எதிரான முறைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இரு கழகங்களும் ஆட்டம் ஒன்றின் போது கைகலப்பில் ஈடுபட்டன என முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டைத் ஆராய்ந்த லீக், சுற்றுப்போட்டிகளில் இரு வருடங்களுக்கு இக்கழகங்கள் விளையாடத் தடை விதிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. (1)

## 'என் மனக்குறைகளைக் அவர் முன்னிலையில் கொட்டுகின்றேன் அவர் திருமுன்னே என் இன்னலை எடுத்துரைக்கின்றேன்'

''கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்'' என்று சொன்ன நம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகள்: இறைவன் எம்மோடு இருக்கின்றார். எமக்குச் செவி கொடுக்கிறார். எம் தேவைகளை நிறைவு செய்கிறார் என்ற நம்பிக்கையை நமக்கு தருகின்றதல்லவா. இறைவன் நமக்குத் தரும் கொடைகளெல்லாம் எமது நன்மைக்காகவே. எதை நாம் இறைவனிடம் இருந்து பெற்றுக்கொள்கின்றோமா? அவை மிகவும் சிறப்பானவையே, இவையெல்லாம் இறைவன் என்மீது காட்டுகின்ற அன்பை நிறை இரக்கத்தை சுட்டிக் காட்டுகின்றது. இறைவன் நமது வாழ்வில் நடைபெறும் எல்லாவற்றையும் அனுகூலமானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகின்றார். ஏனெனில் அவரே நமக்குச் சொல்கின்றார்.




எம்மிடத்திலே ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும், விடா முயற்சி வேண்டும், அசைக்கமுடியாத உறுதி வேண்டும். அதேவேளையில் எம்மிடத்திலிருந்து பொறுமையை, இடைவிடா நம்பிக்கையை, இறைவன் எதிர்பார்க்கின்றார். இவ்விதமாக, எமது வாழ்வு இருப்பின், நாம் இறை அன்பிலிருந்து விலகி செல்லமாட்டோம். நம்பிக்கையை இழந்துவிடமாட்டோம்.

இன்றைய நற்செய்தி ஓர் ஆழமான செய்தியை நமக்குத் தருகின்றது. எதை நாம் இறைவனிடம் கேட்பது, எதை நாம் எதிர்பார்ப்பது என்பதைப் பற்றியே. எனவே நான் இறைவனிடம் எதிர்பர்ப்பவை சுயநலம் நிறைந்தவையாக இருக்கின்றதா? பொதுநலம் நிறைந்ததாக இருக்கின்றதா? என நாம் சிந்திக்கவேண்டும்.

''பிறர் உங்களிற்கு என்ன செய்யவேண்டும் என விரும்புகின்றீர்களோ, அவற்றை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.''

நான் எனது குடும்பத்தவருக்கும் நண்பர்களுக்கும் செய்யக்கூடிய நன்மைத்தனங்கள் என்ன?

மற்றவரால் நான் அனுபவித்த நன்மைத்தனங்களை, ஆசீரை நினைத்துப் பார்த்து, நானும் இன்று அவ்விதம் அமைய என்ன செய்யப்போகின்றேன்? என்பதை நாம் இன்றைய தவக்காலத்தில் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியவை.

- அருட்தந்தை. [illegible] CMF.

## வழிபாட்டு முறைகளில் நிறைவு ஏற்படுவதில்லை ஏன்?

*இவ்வுலகில் பலர் இறைவனை அவருடன் சம்பாஷிக்கவும், அவரை உணர்ந்து அனுபவிக்கவும் வேண்டிப் பிரார்த்திக்கிறார்கள். ஆனால் எவருக்கும் முழு நிறைவு ஏற்படுவதில்லை ஏன்?*

*குறைபாடு பக்தியிலா? முயற்சியிலா? ஆன்மீக பயிற்சியிலா? சடங்கு முறையிலா? இவை எதிலும் இல்லை. கடவுளின் உண்மைத் தன்மை புரியாததால் மக்கள் ஏமாற்றமும் நிராசையும் அடைகிறார்கள். இறைவன் சத்சித் ஆனந்த வடிவம். உலகியல் இன்பங்களில் தன்னை இழந்து இருக்கும்போது எவ்வாறு சத்சித் ஆனந்த வடிவினரான இறைவனை உணர இயலும்? ஆகவே தெய்வத்துவத்தைப் பற்றி நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தெய்வத்தின் இரகசியம், புனிதத்துவம் இவற்றைப் புரிந்துகொண்ட பின்னரே அவரை அறிந்து, உணர்ந்து, அனுபவிக்க இயலும்.*

*தெய்வத்துவத்தை புரிந்துகொள்ள கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞானமார்க்கம் இவை மூன்றும் விதிக்கப்பட்டுள்ளன. கர்ம மார்க்கத்தின் வழியாக நுழைந்து பக்தி மார்க்கத்தின் வழியிலே நின்று ஞானமார்க்கத்தில் முடியவேண்டும்.*

*கர்மமார்க்கம் - இளங்காய்*
*பக்திமார்க்கம் - பழுக்காத கனி*
*ஞானமார்க்கம் - பழுத்த கனி*




*சுவைத்த பிறகே (ஒரு பழத்தின்) இனிமையை உன்னால் உணரமுடியும். வெறும் இளங்காயை உண்பதன் மூலம் பழுத்த கனியின் சுவையை உன்னால் உணரமுடியாது. கர்மமார்க்கத்தின் மூலம் வாழ்க்கையில் பிரவேசித்து, பக்தி வழிபாட்டு மார்க்கத்தின் மூலம் வாழ்க்கையை நடத்தி, ஞானமார்க்கத்தில் வாழ்க்கை முடிவடையவேண்டும். அப்போது தான் நமக்குத் தெய்வீக நிறைவு ஏற்படும். அதற்குத் தகுதி உள்ளவர்களாகவும் நாம் மாறுவோம்.*

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தியாகராசா மகேஸ்வரன்
### அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு



அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (15.02.2008) வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும். விஷேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையுடன் அறுபத்து மூவர் குருபூசை நிகழ்வும் விஷேடமாக நடைபெற உள்ளது. பிரார்த்தனை நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' எனும் பொருளில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலை ஆசிரியர் திரு.க.கைலைநாதன் அவர்கள் சொற்பொழிவாற்றவுள்ளார்.

*மு.கு: ஞானச்சுடர் சந்தாதாரர் கவனத்திற்கு 2008 ஆம் ஆண்டு ஞானச்சுடர் மலரினைத் தொடர்ந்து பெறவிரும்பும் வாசகர்கள் பேரவையினால் 2007ஆம் ஆண்டு கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஞானச்சுடர் மலர்மூலம் அனுப்பி வைக்கப்பட்ட அஞ்சல் உறையின் மூலம் பேரவையுடன் தொடர்பினை ஏற்படுத்தி மலரினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

(சி/551439)

**சந்நிதியான் ஆச்சிரமம்**
**செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலி




அமரர்
## தியாகராசா மகேஸ்வரன்
(நாடாளுமன்ற உறுப்பினர், இந்துகலாசார முன்னாள் அமைச்சர்)

மண்ணின் மைந்தனாய்
மன்றினிலே கர்ச்சித்தாய்
இன்னலுற்ற எங்களுடன்
இணைந்திருந்தே பணி தொடர்ந்தாய்
இன்றதனை நினைக்கையிலே
இதயம் கனக்கிறது....!
பொன்னம்பலவன் முன்
புண் பட்டுப்போனாய் - உன்
பொன்னான ஆத்மா
தில்லைக் கூத்தன் பொற்பாதமதில்
நற்சாந்தி அடையட்டும்.

அன்னாரின் பிரிவினால்
துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.

(71112)

**''அம்பாள்''**
**கடற்றொழிலாளர்**
**கூட்டுறவுச்**
**சங்கம்.**

வெடியரசன்வீதி, காரைநகர்.

## 31ஆம் நாள் நினைவலைகளும்
### *வீட்டுக் கிருத்திய அழைப்பும்*



**அமரர் சின்னத்தம்பி சேகர்**
*(யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்)*

மலர்வு
04*04*1955

உதிர்வு
16*01*2008

*நாளை (15.02.2008) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*இல,43, கலைவாணி வீதி,*
*அரியாலை.*

**குடும்பத்தினர்.**

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**பரநிருபசிங்கம் பரம்சோதி**

*(தலைமையக முன்னாள் பதில் உள்ளூராட்சி ஆணையாளரும்,(1989 Ja-Ju.) திருகோணமலை தலைமையக உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், முல்லைத்தீவு, ஒய்வு பெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,RRAN யாழ்.மாவட்ட இணைப்பாளரும், பொலிஸ் பொதுமக்கள் தலைவரும்,தனியார் பேருந்து சேவைகள் சங்கத் தலைவரும்)*

*பூவுலகில்* *14★12★1935*
*புகழுலகில்* *29★01★2004*

திதி: வளர்பிறை அட்டமி 14.02.2008

சீர் பூத்த செம்மல் கார்இருள் சூழ்ந்த பாரினில்,சான்றோர் போற்றும் பேரொளியாகி,பல்வேறுபட்ட அரசினரிடமும், தனியாரிடமும்,சிறந்த நிர்வாகத்திறன் மிக்கோன் எனப்பேரெடுத்து தன்வழி போன்று துணிக்ரம், பண்பு, அறிவு, சமத்துவமிக்க செயல்வீர அறுவரை பூவுலகில் பணிதொடரச் செய்து, விண்ணுலகிலும் தன் குடும்ப இறைதூதனாகி, மறைந்திட்ட எங்கள் குடும்பத் தெய்வத்தின் நிர்மலமான உதிர்வின் துயரை நான்கு வருடங்களாயும் சிவமயமான அமரரின் நினைவில் வாழும் அன்பு உள்ளங்கள்.

''மகேசபவன்''
163, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மலை..., 
மரு...

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## ராணி சோமசுந்தரம்

**நாளும் பொழுதும் நேரில் கண்டோம் உனை**
**சடுதியில் மறைந்து கலங்க வைத்தாயே - எமை**
**சகோதரியே காலங்கள் பல கடந்தாலும்**
**எம் நினைவை விட்டு மறைய மாட்டாய் நீ!**

*...டி ஒழுங்கை,*
*...க்குவில்.*

*என்றும் உன் நினைவுகளுடன்*
**உடன்பிறப்புகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யுத்தத் தீவிரப் போக்குக்கு எதிராக சர்வதேச நிலைப்பாடு

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் மேற்கு நாடுகள் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டு அதன் மீது தடை விதித்தன.

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் சமதரப்பு அந்தஸ்து என்ற இணக்கப்பாட்டுடன் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டிருக்கையில், அவற்றில் ஒரு தரப்பின் அந்தஸ்து நிலையைக் கெடுக்கும் விதத்தில் தடையை விதித்து, அமைதி முயற்சிகளைக் குழப்பாதீர்கள் என்று தமிழர் சார்பு அமைப்புகள் பலவும் சுட்டிக்காட்டிய போதிலும் அதைக் காதில் வாங்காமல் நடந்து கொண்டது ஐரோப்பிய சமூகம்.

கொழும்பின் பொய்ப் பரப்புரைகளுக்கு எடுபட்டு, புலிகள் மீது தடை விதித்து, அமைதி முயற்சிகளுக்கு எஞ்சியிருந்த கொஞ்ச நஞ்ச வாய்ப்பையும் சிதறடித்ததில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பும் புறக்கணிக்கத் தக்கதல்ல.

அத்தகைய நடவடிக்கைகளினால் கிடைத்த வாய்ப்பான சூழ்நிலையைப் பயன்படுத்தி, அமைதி முயற்சிகளுக்கு நிரந்தர சாவுமணி அடித்த கொழும்பு, இப்போது யுத்த வெறித் தீவிரத்தில் சந்நத உருக்கொண்டு நிற்கின்றது.

அமைதி வேளையில் புலிகள் மீது நடவடிக்கை எடுத்த மேற்குலகு, இப்போது யுத்த சமயத்தில், போர்த் தீவிரத்தில் துடிக்கும் இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து பிரஸ்தாபிக்கின்றது: ஆராய்கின்றது.

இலங்கையின் யுத்த தீவிரச் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்தும், அமைதி முயற்சி வழிகளுக்குத் திரும்பும்படி வலியுறுத்தும் விதத்திலும் இலங்கைக்கு எதிராகச் சில பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்திமிக்க நாடான ஜேர்மன் கேட்டிருக்கின்றது.

பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கான ஜேர்மனியின் சமஷ்டி அமைச்சர் ஹெய்டிமேரி விஸோரக் ஸியோல் அம்மையார் இவ்விடயம் குறித்து வெளிப்படையாகவும் காட்டமாகவும் கருத்துக் கூறியிருக்கின்றார்.

முக்கியமாக இலங்கைக்கான விசேட வரிச் சலுகைகளை நிறுத்துவதற்கு அவர் முன்மொழிந்திருக்கின்றார்.

இலங்கையில் தைக்கப்படும் ஆடைகளை வரிச்சலுகை வழங்கி இறக்குமதி செய்கிறது அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும்.

இலங்கைக்கு, ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் விசேட வரிச் சலுகைகளை வழங்குவதாலேயே மற்ற நாடுகளோடு போட்டி போட்டுக்கொண்டு இந்த இரு தரப்புகளுக்கும் தைத்த ஆடைகளை இலங்கையால் தாராளமாக ஏற்றுமதி செய்ய முடிகின்றது. இந்த வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் ரத்துச் செய்யுமானால் இலங்கையால் பிற நாடுகளுடன் போட்டிபோட்டு குறைந்த கட்டணத்தில் அத்தகைய ஆடைகளை ஏற்றுமதி செய்ய முடியாது. இலங்கையின் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் படுத்துவிடும். இலங்கையில் உள்ள ஆயிரக்கணக்கான ஆடைத் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா நடத்தவேண்டி நேரும். ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் லட்சத்துக்கும் அதிக தொழிலாளர்கள் வேலை இழந்து நடுவீதிக்கு வருவர். நாட்டின் பொருளாதாரமே நெருக்கடிக்குள் மூழ்கும்.

ஐரோப்பிய ஒன்றியம் மட்டும் வருடாந்தம் நூற்றியிருபது கோடி டொலருக்கு (சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கு) இலங்கையிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கின்றது. இதேபோன்ற பெருந்தொகைக்கு அமெரிக்காவுக்கும் தைத்த ஆடைகள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த இரண்டு தரப்புகளும், இலங்கைக்கு விசேடமாக வழங்கிவரும் வரி இல்லாத சலுகையை ரத்துச்செய்து, ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி விடயத்தில் மற்றைய நாடுகளுடன் நியாயமான போட்டியில் ஈடுபடுங்கள் என்று இலங்கைக்கும் கூறி ஒதுங்குமானால், இலங்கையில் உள்ள பல நூறு ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளை நிரந்தரமாக இழுத்து மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிடும்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பொதுவாக உள்ள இறக்குமதி வரியை இலங்கையும் செலுத்தி, அங்கு ஆடைகளை ஏற்றுமதி செய்வதாயின் அது இலங்கைத் தொழிற்சாலைகளுக்குக் கட்டுப்படியாகாது. இத்துறையில் போட்டிபோடும் ஏனைய நாடுகளுடன் இலங்கையால் தாக்குப் பிடிக்க முடியாது.

ஆகவே, பொருளாதார விடயத்தில் இலங்கையின் முக்கிய 'குடுமியை' தனது கையில் பிடித்து வைத்துக் கொண்டே ஜேர்மன் இப்போது நியாயத்தைப் பேச - நிலைநிறுத்த - முற்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு வழங்கிவந்த இந்த வரிச்சலுகைத் திட்டம் 2008 உடன் நிறைவு பெற இருக்கும் இச்சமயத்தில் இவ்விவகாரம் குறித்து அமெரிக்காவுடன் பேசி ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்று ஜேர்மனி முன்மொழிவது இக்கால கட்டத்தில் முக்கியமான ஒரு திருப்புமுனையாகும்.

இதேசமயம், யுத்த முனைப்பில் இலங்கை தீவிரம் காட்டுவதால் இலங்கைக்கான தனது புதிய அபிவிருத்தி மற்றும் உதவித் திட்டங்களை ஜேர்மன் அடியோடு இடைநிறுத்தியிருக்கின்றமை குறித்தும் ஜேர்மன் அமைச்சர் விளக்கியிருக்கின்றார்.

கொழும்பின் யுத்தத் தீவிரப் போக்குக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் காத்திரமான நிலைப்பாடு கருக்கட்டி வருவதையே ஜேர்மன் அமைச்சரின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

# வடக்கு - கிழக்கில் 8 மாத கால மோதல்களில் 45 சிறுவர்கள் மரணம்; 77 பேர் அங்கவீனம்

## ஐ.நாவின் அறிக்கையில் தகவல்

கொழும்பு,பெப்.14

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் 2007 ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் 469 சிறுவர்கள் பலவந்தமாக படையணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர். இக்காலப்பகுதியில் மோதல்கள் காரணமாக 45 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 77 பேர் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். மோதல்கள் காரணமாக வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் 261 பாடசாலைகள் அழிவடைந்துள்ளன.

- இவ்வாறு சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் ஆயுதமோதல்கள் இடம்பெறும் நாடுகளில் சிறுவர்கள் பலவந்தமாக படை யணிகளில் சேர்க்கப்படுதல் மற்றும் சிறு வர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர் பாக ஐ.நா. தனது அவதானிப்புக்களை இவ்வறிக்கையில் வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 2006 நவம்பர் முதலாம் திகதி முதல் 2007 ஓகஸ்ட் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் 262 சிறுவர்கள் படையணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 41 வீதமான சிறுவர்கள் (109), மட்டக்களப்பையும், 27 வீதமானோர் (75) கிளிநொச்சியையும் சேர்ந்தவர்களாவர். இவர்களில் 12 வயதான 5 சிறுவர் களும், 13 வயதான 10 சிறுவர்களும், 14 வயதான 14 சிறுவர்க்ளும், 15 வயதான 48 சிறுவர்களும், 16 வயதான 65 சிறுவர்களும், 17 வயதான 84 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இக்காலப்பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அல்லது கருணா குழுவினால் 207 சிறுவர்கள் பலவந்தமாக படையணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். அம்பாறை, திருகோண மலை, பொலனறுவை பகுதியிலிருந்தும் சிறுவர்கள் படையணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். 9 வயதுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும், 12 வயதுடைய 2 பேரும், 13 வயதுடைய 2 பேரும், 14 வயதுடைய 35 பேரும், 15 வயதுடைய 40 பேரும், 16 வயதுடைய 47 பேரும், 17 வயதுடைய 35 பேரும் இதில் அடங்குகின்றனர்.

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் மோதல்களில் சிக்கி இக்காலப்பகுதியில் 45 சிறுவர்கள் பலியாகியுள்ளனர். 77 பேர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு,பெப்.14

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குரிய முதலாம் காலாண்டுக்குரிய மருந்துப் பொருள்கள் அனுப்பப்படாமையினால் முக்கிய மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்திருக்கிறது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இன்றியமையாத தேவைகள் குழு கூட்டத்தில் இந்த விடயம் பிராந்தியப் பணிமனையினால் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குரிய முதலாம் காலாண்டுக்குரிய மருந்துப் பொருள்கள் அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியாவிலிருந்து ஓமந்தை ஊடாக அத்தியாவசியப் பொருள்களான உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்களை கிளிநொச்சிக்கு எடுத்துவருவதில் பெரும் இடர்கள் எதிர்கொள்ளப்படுகின்றன என கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு பெரும் சவால்களை எதிர் கொள்கின்ற ஆண்டாக உள்ளது. வவுனியாவிற்கு உணவுப் பொருள்கள் வந்து சேர்வதில் தடைகள் காணப்படுகின்றன. வவுனியாவில் வந்து சேர்கின்ற உணவுப் பொருள்களை கிளிநொச்சிக்கு எடுத்துவர முடியாத நிலை காணப்படுகின்றது. அனுமதி கிடைத் தவுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் கள் பொருள்களை எடுத்து வரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (சி)

## தெல்லிப்பழையில் குடும்பஸ்தரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.14

தெல்லிப்பழையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, சித்தியம்புளியடியைச் சேர்ந்த முருகன் பூபாலன் (வயது 56) என்பவரையே காணவில்லை என அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை காலை மேசன் வேலைக்கு என புறப்பட்டுச் சென்றவரைக் காணவில்லை என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. (1-86)

## தறித்த பனைமரத்தில் சிக்கி சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.14

சங்குவேலி தெற்கு, மானிப்பாயில் நேற்று பிற்பகல் 2 மணியயவில் தறித்த பனைமரத்தில் சிக்கி சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி கஜேந்திரன் (வயது -11) என்ற சிறுவனே பலியானவர் ஆவார்.

குறிப்பிட்ட சிறுவன் தனது சிறிய தாயார் வீட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு பனைமரம் தறிக்கப்பட்ட போது குறுக்கே ஓடிய சிறுவன் பனை மரத்தில் சிக்கி பலியானதாவும் கூறப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (203-78)

### நாளை

| | |
|---|---|
| மாசி - 03 | 15.02.2008 வெள்ளிக்கிழமை |
| திதி : நவமி | முன்னிரவு 06.37 வரை |
| நட்சத்திரம் : | ரோகிணி முன்னிரவு 11.50 |
| சுபநேரம் : | 06.33-08.03 |
| ராகுகாலம் : | 11.03-12.33 |

## யாழ். வரும் டாக்டர்கள் 32 பேருக்கு இலவச விமான பயணத்துக்கு ஏற்பாடு

கொழும்பு,பெப்.14

வடபகுதியில் சேவையாற்றும் 32 வைத் தியர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வருவதற்கு இலவச விமான பயணச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்திருக்கிறார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித் திருப்பவை வருமாறு:-

வடபகுதியில் சேவையாற்றும் வைத்தியர்களுக்குரிய தங்குமிடம், உணவு மற்றும் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

தற்போது போக்குவரத்து மற்றும் ஏனைய பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அவர்களுக்கு இந்த விமான பயணவசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் வைத்தியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே அங்கு மருத்துவ சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு இத்தகைய ஏற் பாடுகளை அரசு செய்திருக்கிறது.

வடபகுதியில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில் போன்றவற்றில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

## நாளை என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது

### ரஜினி பேட்டி

நகரி,பெப்.14

சூப்பர் 'ஸ்ரார்' ரஜினிகாந் தான் அரசியலுக்கு வருவது பற்றி பரபரப்பான பேட்டியொன்றை அளித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், விஜயநகரம் அருகேயுள்ள பொப்பிலி என்ற இடத்தில், ரஜினியின் உதவியாளர் ஒருவரின் மகனின் திருமண நிகழ்வுக்குச் சென்றபோது இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கூறியவை வருமாறு:-

அரசியலுக்கு வருவீர்களா? என்று பத் திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, ''இப்போதைக்கு அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை. தற்போது 2 படங்களில் நடித்து வருகிறேன். அவற்றின் படப் பிடிப்பு முடிவடைவதற்கு 2 ஆண்டுகள் ஆகும். தற்போது சினிமா மீதே முழுக் கவனமும் உள்ளது.

''நாளை என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது'' - என தனது பாணியில் அவர் பதிலளித்தார்.

ரஜினி அரசியலில் ஆர்வம் காட்டி வருகிறார். அவர் அரசியலில் விரைவில் குதிப்பார் என்று செய்திகள் வெளிவந்திருக்கும் நிலையில் ரஜினியின் இந்தப் பேட்டி தமிழக அரசியலில் பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ''இது போட்டி நிறைந்த உலகம். சினிமாவில் மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் கடுமையான போட்டி நிலவுகிறது. போட்டியைத் தாண்டி நிலைத்து நிற்பவர்கள் தான் நிலைத்து நிற்பார்கள் - என் றும் அவர் கூறினார்.

இதையடுத்து ரஜினி பற்றிய புத்தகம் எழுதும் டாக்டர் காயத்திரி ஸ்ரீராம் கூறுகையில், ''ரஜினி பற்றி வெளியுலகத்துக்கு தெரி யாத பல விடயங்கள் உள்ளன.

அரசியல் நிலைமையைக் கணிப்பதில் அவர் வல்லவர். தற்போது நடைபெற்று வரும் ராமர் பாலம் தொடர்பான சர்ச்சையில், அரசியல் கட்சிகளின் உண்மை நிலைமையைத் தெரிந்து கொள்ள அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார். ராமர் பாலத்தைப் பாதுகாப்பது தொடர்பாக நடைபெற்ற பேரணி ஒன்றில், மக்களோடு மக்களாகக் கலந்து ரஜனியும் பங்கேற்றவர்.''

- இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

### காலத்தின் தேவையறிந்து சேவையாற்றிய சேவையாளர் என்றும் வாழ்க




ஆரம்பத்தில் லிகிதராக பதவியேற்ற திரு. இ. பத்மநாதன் அவர்கள் தனது முயற்சியினாலும் ஆளுமையினாலும் இன்றுஎமது வைத்தியசாலையின் செயலாளராக வளர்ச்சி அடைந்துள்ளவர் என்பதனையிட்டு நான் பெருமைப்படுகி றேன். இவர் தொடர்ச்சியாக நீண்ட காலம் அதாவது 28 வருடங்கள் எமது வைத்தியசாலையில்கடமையாற்றிய ஒரு பதவி நிலை உத்தியோகத்தர் மட்டுமன்றி தன்னையே இவ்வைத்தியசாலைக்கே அர்ப்பணித்துச் சேவையாற்றிய ஒரு சேவையாளரும் எனலாம்.

ஏனெனில் எந்தவொரு சூழ்நிலையிலும் எந்த நேரத்திலும் இங்கு வந்து பல்வேறு கஷ்டத்தின் மத்தியிலும் இங்கு ஏற்படும் எந்தவொரு பிரச்சினையையும் தானே முகம் கொடுத்து சேவையாற்றியவர். இதனை விட கடந்த காலங்களில் எம் வைத்திசாலையில் ஏற்பட்ட பிரச்சினைகள், அவை எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டன என்பது பற்றிய பல்வேறு அனுபவங்கள், தகவல்கள் நாம் பெறக்கூடிய ஓர் அத்துப்படி மிக்க தகவல் காப்பாளருமாக இருந்ததுடன் இவற்றுக்கேற்ப எல்லா பிரச்சினைகளையும் நுட்பமாக கையாளுபவர் ஆவார்.

தனது சரியான கடமை நேரத்தில் இங்கு வந்து கடமையை நிறைவேற்றுவதில் இவருக்கு நிகர் இவரே எனக் கூறலாம். எமது வைத்தியசாலை செயலாளரான இவர் மென்மேலும் தன்னால் இயலுமான சேவைகளை வழங்கவும் என்றும் சிறப்புடன் வாழவும் வாழ்த்துக்க ளைத் தெரிவித்துக் கொள்வதுடன்இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

**டாக்டர். ஏ. ஞானசோதி,**
பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



### வாழ்க வளமுடன்



60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர். பத்மநாதன் அவர்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து அதனை உடனுக்குடன் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றி வந்த கடமை உணர்வுமிக்க நற்பண்பாளர்.

நெருக்கடிமிக்க காலங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையில் மக்களுக்கு தேவைகள் அதிகரித்துள்ள நிலையில் தமது நிர்வாகம் சார்ந்த பணிகளை நேரம் காலம் பார்க்காது அன்பான பேச்சுடனும் உதவி புரியும் நோக்குடனும் நிறைவேற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். எடுத்த காரியங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதுடனும் மற்ற உத்தியோகத்தர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகவும் நல்ஆசானாகவும் திகழ்பவர்.

தமது சேவைக் காலத்தில் சிரத்தையுடனும் மனித நேயத்துடனும் செயவாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் இவரின் வாழ்க்கை மிகவும் வளமுடனும் ஆரோக்கியத்துடனும் இன்புற்று வாழ வாழ்த்துகிறேன்.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

### பாராட்டுவதற்கு அப்பாற்பட்ட ஒரு சேவையாளர்



கடந்த 28 ஆண்டு காலமாக சிறந்த சேவையாளனாகப் பணியாற்றி வரும் நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதனை யாழ். போதனா வைத்தியசாலையின் வளர்ச்சியின் நிர்வாகத் தூண் எனக் கூறினாலும் மிகையாகாது.

இவரின் புன்முறுவல் பூத்தமுகமும், நிர்வாகக் கட்டமைப்பின் நுணுக்கங்களை அறிந்து செயற்படும் ஆற்றலும், நேரம் தவறாது கடமைக்கு சமுகமளிக்கும் பண்பும் போற்றப்படக் கூடியவை.

இவரில் நான் கண்ட குணாதிசயம் என்னவெனில், எந்த விதமான வைத்தியசாலை வேலைகளையும் செய்யமுடியுமா எனக் கேட்கும் பொழுதெல்லாம் முடியும் என்ற மனப்பான்மையுடன் (Positive manner) தொழிற்படும் ஒரு தலை சிறந்த நிர்வாக உத்தியோகத்தராவார். நான் அவரிடம் கற்ற நிர்வாக நுட்பங்கள் ஏராளமாகும். இ. பத்மநாதன் அவர்கள் நிர்வாக உத்தியோகத்தவராக மட்டுமன்றி எனக்குச் சிறந்த நண்பனாகவும் கடந்த இருபத்தி மூன்று ஆண்டுகளாகப் பழகியவரென்பதும் குறிப் பிடத்தக்கது.

இ. பத்மநாதனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆசிகளைக் கூறிக் கொள்வதுடன், அவராற்றிய சேவையானது பாராட்டுவதற்கும் அப்பாற்பட்டது என சகலரும் அறிந்ததே என்பதையும் தெரியப்படுத்துகிறேன்.

**டாக்டர் எஸ். ரவிராஜ்,**
சத்திர சிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை.

## திரு. இரத்தினம் பத்மநாதன்

**செயலாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| எழுதுநர்: | 15.06.1970 |
| நிர்வாக உத்தியோகத்தர்- செயலாளர்: | 17.07.1987 |
| அறுபது வருட பூர்த்தி: | 14.02.2008 |

**கல்வி:**

01. 1953-1959 ஆரம்ப பாடசாலை, கொழும்புத்துறை, இந்து மகா வித்தியாலயம்
02. 1960- 1966 சம்பத்திரிசியார் கல்லூரி
03. 1967- 1969 யாழ்.இந்துக் கல்லூரி
04. 1969- 1969 Oct. பேராதனைப் பல்கலைக்கழகம்

**தகைமை:**

01. கலைப்பட்டதாரி (பேராதனை)
02. Professional Part II, I.C.M.A (லண்டன்)
03. டிப்ளோமா முகாமைத்துவம் (SLIDA)

### ஆளுமைமிக்க மக்கள் சேவையாளன்



யாழ். குடாநாட்டு மக்களின் அபய நிலையமாக விளங்குவது யாழ். போதனா வைத்தியசாலை. பல ஆயிரம் பேர் பணி செய்யும் இந்நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தராகப் பல வருடங்களாகப் பணியாற்றியவர் இரத்தினம் பத்மநாதன் அவர்கள். நிறைந்த ஆளுமை மிக்க இவரது மக்கள் சேவை அனைவராலும் போற்றப் படுகிறது. மிக நெருக்கடியான காலங்களில் பணிப்பாளராகப் பணியாற்றியவர்களுக்குப் பக்கபலமாக நின்று தொண்டாற்றியமை மறக்க இயலாது. யாழ். போதனா வைத்தியசாலையில் நவீன கண்சத்திர சிகிச்சைக் கூடத்தை யான் அமைத்த வேளையிலும் சரி, வேறு சில பணிகளை நிறைவேற்றுவதற்கும் பேராதரவு தந்து அப்பணிகள் நிறைவேற அயராது பாடுபட்டமை என்றும் நெஞ்சை விட்டகலா. இப்பெருமகனார் ஓய்வுபெற்றுச் சென்றாலும் அவரது சேவை என்றும் பாராட்டுக்குரியவை. அவரது ஓய்வுகாலம் நிறைந்த நலங்களோடு நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை வேண்டி ஆசிகூறி அமைகிறேன்.

**ஆறு.திருமுருகன்**
பிரதி அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### கடமை உணர்வுமிக்க நிர்வாகச் செயல்வீரன்

துணிச்சலும் அர்ப்பணிப்பும் ஒருங்கே அமைந்த நிர்வாகச் செயல்வீரனாக காலத்தை வென்று கடினமான சுமைகளைத் தாங்கி அரும்பெரும் சேவையை ஆற்றிக் கொண்டிருக்கும் நிர்வாகச் செயல்வீரனை நாம் நன்றிப் பெருக்குடன் அவர் பணி தொடரவும் சகல சௌபாக்கியங்களும் பெற்று குடும்ப சகிதம் பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

**அபிவிருத்தி உதவியாளர்கள்,**
யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## An Able Administrator



I have known Mr. Ratnam Pathmanathan for well over 30 years first as my student in the University of Ceylon, Peradeniya, lateras a well known health administrator. Mr. Pathamanthan having worked in many places in Srilanka and moved to Jaffna in 1980.

In the Jaffna Teaching Hospital he has been working as a Chief AdministrativeStaff officer/Secretary for twentyeight years. He had managed the teaching hospital very efficiently during number of critical and crisis periods. He was one of the active administrators for the rehabilitation and reconstruction of the Teaching Hospital after 1996 resettlement of Jaffna.

He is a Hard working and intelligent person does things systematically He is very active and has a very good habit in time management. He is always concerned about patients welfare and hospital developement.

I wish him all the best and prosperous future in his life.

**Prof. P.Balasundarampillai**
**Former Vice-Chancellor, University of Jaffna.**

### தன்னிகரற்ற சேவையாளன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 28 வருடங்களாககடமையாற்றி வரும் இரத்தினம் பத்மநாதன் அவர்கள் மிகுந்த ஆளுமை நிறைந்த தற்றுணிவு நிறைந்த தன்னிகரற்ற சேவை மனப்பான்மையுடைய உத்தியோகத்தவராவார். அகவை 60 இற்குள் நுழைந்து மணிவிழாக் கொண்டாடும் இவரை நீடூழி வாழ வேண்டும் என்றும் இவரின் சேவை தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

பாலில் நெய்யைக் கலக்கியே கொள்வர்
சேவையின் முத்தும் செல்வையாய் பெற்றிட
பத்மநாதனின் கலக்கி எடுத்த முத்து
யாழ் மிளிர் போதனா வைத்தியசாலையே

அறுபது நிரம்பின் அகலவே வைக்கும்
அரசியல் சட்டம், புரிந்துணர்வுடன்
பூரித்து நிற்கும் வைத்தியத்துறையை
வழி வழி நடத்த இவரது சேவை
நீண்டு, நீடூழி வாழ்க.

**காரியாலய உத்தியோகத்தர்கள்,**
யாழ்.போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்.


## MINISTRY OF CONSTRUCTION AND ENGINEERING SERVICES
## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS
### Rehabilitation to Administration Block, University of Jaffna

1. **The Chairman, Department Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Rehabilitation to Administration Block, University of Jaffna" as described below and estimated to cost of Rs.7.55m.

   The construction period is 84 Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for **grade M6/C7** or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna,** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**

   Contact numbers are: **phone: 021-222 2781 Facsimile: 021-2222781**
5. A complete set of Bidding Document in English language may be purchased by interested bidders on the submission of a written application to **the Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna, from 14th February 2008** until **29th February 2008** from **9:00 hrs to 15:00 hrs** upon payment of non refundable fee of **Rupees one thousand (Rs.1000/=).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Depatment Procurement Committee, Department of Buildings, 2nd Floor, "Setbsiripaya", Battaramulla at or before 10.00 hrs on 04th March 2008.** Bids will be opened soon after closing at the Contract Branch, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla in presence of the bidders' representatives who choose to attend.
7. Tenders are advised to enter "Sethsiipaya" Premises at least 1 hour before the scheduted time for tender closing, due to security checking.
8. All bids shall be accompanied by a Bid Security for an amount of **Rupees one hundred and fifty thousand (Rs.150,000.00)** which should be valid up to **16th June 2008.**

**D.C.A.S. Pathmathilaka**
Director General of Buildings
Department of Buildings
"Sethsiripaya", Battaramulla.
www.buildings.gov.lk

(C/551452)


## யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
### தரம் 5- புலமைப் பரிசில் பரீட்சை- 2007

சித்திபெற்ற மற்றும் அண்மித்த புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பாராட்டப்படும் இன்றைய நாளில் நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்




செல்வன் இ.பதுஷன் (160)



செல்வி வி.துளசிகா (147)



செல்வி ம.நிவேனிகா (145)



செல்வன் இ.நிருஜன் (144)



செல்வி க.டில்க்கி (142)



செல்வி பா.டான்சிகா (140)

| | | | |
|---|---|---|---|
| ம.சிந்துஜா | -139 | ச.நிலானி | -136 |
| இ.செல்வரதன் | -134 | ர.கிருத்திகா | -133 |
| வி.அலஸ்அன்ரனி | -133 | க.கோகுலக்சன் | -131 |
| ச.சசிதரன் | -123 | சி.டனுசன் | -120 |
| ச.பவிதா | -119 | அ.அனுராகவன் | -116 |
| இ.யதுசன் | -112 | ட.கலக்சன் | -112 |
| ச.கௌசிகா | -109 | இ.டினோஜன் | -102 |
| | | இ.கனுஸ்ரிகா | -100 |

இவர்களை வழிப்படுத்திய அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் திரு.க.ஸ்ரீநந்தகோபன், திரு த.அருளரசன் மற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**-பெற்றோர்கள்.**

(சி/551434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. வீரர்களுக்கு ஐ.பி.எல். கெடு

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) போட்டிகளில் ஆடுவது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது பற்றி வரும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் ஆஸ்திரேலிய வீரர்கள் தங்கள் முடிவைத் தெரிவிக்க வேண்டும் என்று லீக்கின் தலைவர் லலித் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் சபையால் தொடங்கப்பட்டுள்ள இந்தியன் பிறீமியர் லீக் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் ருவெண்ரி/20 போட்டிகளை நடத்தவுள்ளது. 8 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் கில்கிறிஸ்ற் உள்ளிட்ட ஆஸ்திரேலிய வீரர்கள் பங்கேற்க ஆர்வமாகவுள்ளனர். ஆனால், அவர்களின் விளம்பர அனுசரணை விடயத்தில் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை கட்டுப்பாடு விதித்துள்ளது.

இதன் காரணமாக ஆஸ்திரேலிய வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்க அந்நாட்டுக் கிரிக்கெட் சபையின் அனுமதியைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் லீக் அமைப்பின் தலைவர் லலித் மோடி ஆஸ்திரேலிய வீரர்களுக்கு கெடு விதித்துள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது பற்றி முடிவு செய்யாவிட்டால் லீக் போட்டிகளில் 3 ஆண்டுகளுக்கு அவர்களால் விளையாட முடியாது என்றும் மோடி கூறியுள்ளார்.

# கங்குலி அணியில் கில்கிறிஸ்ட்

இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் கங்குலி தலைமையிலான அணியில் கில்கிறிஸ்ற், கலிஸ், அப்ரிடி, ஹைடன் ஆகிய வீரர்கள் இடம்பெற உள்ளனர்.

இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பில் இடம்பெற்றுள்ள அணிகளில் கொல்கத்தா அணியை பிரபல ஹிந்தி நடிகர் ஷாருகான் விலைக்கு வாங்கியுள்ளார்.

இந்த அணியின் தலைவராக முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இந்த அணியில் இடம்பெறும் வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைக் கங்குலியிடம் ஷாருக்கான் வழங்கவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

தனது அணியில் ஆஸ்திரேலிய வீரர் கில்கிறிஸ்ற், தென்னாபிரிக்க வீரர் கலிஸ், பாகிஸ்தான் வீரர் அப்ரிடி ஆகியோர் இடம் பெற வேண்டும் என்று கங்குலி விரும்புகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள இரண்டு கார்கள் உடன் விற்பனைக்கு. Nissan sunny - N.P HE XXXX தொடர் இலக்கமுடையது. TOYOTA COROLLA WP JR XXXX தொடரிலக்க முடையது.

தொடர்பு : 57 , சென்.பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 0776062569, 0214590175

**தேவை**

எமது பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்காய்வு பயிலுநர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல.
021 222 2478


# இந்தியக் கிரிக்கெட் சபை மீது கபில்தேவ் வழக்குத் தாக்கல்

புதுடில்லி, பெப். 14

முன்னாள் கிரிக்கெட் வீரர் என்ற முறையில் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை நிறுத்தியது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபை மீது கபில்தேவ் வழக்குத் தொடுத்துள்ளார்.

புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பாக அவர் மனு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பவையாவன,

கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு முன்னாள் வீரர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சலுகைகள் எனக்கு வழங்கப்பட்டு வந்தன. ஆனால், வேண்டுமென்றே விதிமுறைகளைத் திருத்தி ஓய்வூதியத்தைக் கிரிக்கெட் சபை நிறுத்திவிட்டது.

"முன்னாள் வீரர்களுக்கு என வழங்கப்படும் போட்டிகளைக் காண்பதற்கான ரிக்கெட்டும் எனக்கு வழங்கப்படவில்லை. கிரிக்கெட் சபைக்கு போட்டியான இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பில் நான் சேர்ந்ததுமே, தேசியக் கிரிக்கெட் அக்கடமி தலைவர் பதவியிலிருந்து என்னை நீக்கிவிட்டனர். இதனை எனக்கு முறைப்படிக்கூடத் தெரிவிக்கவில்லை. இதுபோட்டி அமைப்பு அல்ல. இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் அமைப்பு." - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்த மனுவில் கிரிக்கெட் சபை சர்வாதிகார மனப்பான்மையோடு செயற்பட்டு வருவதாகவும் கபில்தேவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# மலேஷிய நாடாளுமன்றம் கலைப்பு

கோலாலம்பூர், பெப்.14

மலேஷிய நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக அந்நாட்டுப் பிரதமர் அப்துல்லா அகமது படாவி நேற்று அறிவித்தார். நாடாளுமன்றத்திற்கு விரைவில் பொதுத் தேர்தல் நடத்த வசதியாக நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்க மன்னர் தனது ஒப்புதலை அளித்திருக்கின்றார் என கோலாலம்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய படாவி கூறினார்.

மலேஷியாவில் உள்ள பல்வேறு மாகாண சட்டப்பேரவைகளும் இதேநாளில் கலைக்கப்படுவதாகவும் படாவி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளுக்கு தேர்தல் நடைபெறும் திகதியை தேர்தல் ஆணையம் விரைவில் முடிவு செய்து அறிவிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் மலேஷியாவில் கடந்த சில மாதங்களாக நிலவிவந்த அரசியல் நிச்சயமற்ற தன்மை முடிவுக்கு வந்துள்ளது.

**அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக்கான தேர்தல்**

# மேலும் 3 மாநிலங்களில் வென்று ஹிலாரியை முந்தினார் ஒபாமா

வாஷிங்டன், பெப். 14

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரைத் தேர்வு செய்வதற்கான முதற்கட்ட வாக்குப்பதிவில் மேரிலாண்ட், வெர்ஜீனியா மற்றும் வாஷிங்டன் (டி.சி) ஆகிய மாநிலங்களில் செனட் உறுப்பினரான கறுப்பு இனத்தைச் சேர்ந்த பாரக் ஒபாமா பாரிய வித்தியாசத்தில் ஹிலாரி கிளின்ரனைத் தோற்கடித்தார்.

இந்த வெற்றிகள் மூலம் கிடைக்கப்பெற்ற பிரதிநிதிகளின் அடிப்படையில் ஹிலாரியை முந்தினார் ஒபாமா. மேற்படி மூன்று மாநிலத் தேர்தல்களின் முடிவில் ஒபாமா 1,223 பிரதிநிதிகளையும், ஹிலாரி 1,198 பிரதிநிதிகளையும் சேர்த்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 52 மாநிலங்களிலும் முதல்கட்டத் தேர்தல் முடிவடையும் போது குறைந்தது 2,025 பிரதிநிதிகளைச் சேர்த்திருக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று மாநிலங்களிலும் பெற்ற பெரு வெற்றியைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் முதலிடத்திற்கு ஒபாமா முன்னேறியுள்ளார். இதனால் தொடர்ந்துநடைபெறவுள்ள மற்றைய மாநிலத் தேர்தல்களில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாய நிலைக்கு ஹிலாரி தள்ளப்பட்டுள்ளார்.

இதனிடையே வெர்ஜீனியா, மேரிலாண்ட் மற்றும் வாஷிங்டனில் குடியரசுக்கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்ன் அமோக வெற்றிபெற்றுள்ளார். மேற்படி மூன்று மாநிலங்களிலும் அனைத்து பிரதிநிதிகளையும் இவர் தன் வசம் ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குடியரசுக் கட்சி வேட்பாளர் தெரிவில் ஆரம்பத்திலிருந்தே மெக்கெய்ன் முன்னணியில் உள்ளார் என்பது தெரிந்ததே.


சிறையில் மீந்திருக்கிறவர்கள் அந்த தேசத்திலேயே மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள்.

எருசலேமின் (யாழ்ப்பாணம்) அலங்கம் இடிபட்டதும் அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள். (நெகேமியா 1:3)

**எழுந்து கட்டுவோம்! வாருங்கள்!!**

(விசேஷித்த அபிஷேகக் கூட்டங்கள்)

தலைமை தாங்குபவர்:

உலகமெங்கும் வல்லமையாய் பயன்படுத்தப்படும் அப்போஸ்தலரும், தீர்க்கதரிசியுமான

**REV.S.DANIEL**

ஆண்டவர்

இந்நாள்களில் LEBANON தேசத்தில் பெரிய எழுப்புதலை அவர் மூலம் கட்டளையிட்டுள்ளார். ஆயிரமாயிரம் பேர் இயேசுவை ஏற்றுக்கொண்டு நூற்றுக்கணக்கானோர் ஒரே நாளில் ஞானஸ்தானம் எடுத்த காட்சிகளைப் பார்வையிடலாம்.

தீராத வியாதிகள், கவலை, கண்ணீர், கடன் பிரச்சினை, பிசாசின் பிடி, பில்லி, சூனியக்கட்டு, சாபங்கள் ஆகியவற்றிலிருந்து இயேசு விடுதலை கொடுக்கிறார்.

வாருங்கள்! வந்து விடுதலை பெறுங்கள்!!

காலம்
14.02.2008 வியாழன் பி.ப 1 மணி
15.02.2008 வெள்ளி பி.ப 1 மணி
} சுகமளிக்கும் ஆராதனை

16.02.2008 சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை வரை தேசத்திற்காய் விஷேசித்த உபவாசக்கூட்டம் அனைத்து சபைப் போதகர்களும் ஊழியர்களும் விசுவாசிகளும் கலந்து கொள்ளவும்.

**17.02.2008 ஞாயிறு காலை 10 மணிக்கு விஷேசித்த ஆராதனை**

அனைவரும் வருக! ஆசீர்வாதம் பெறுக!!

இடம்
Yarl
Tamil Mission church,
418, Navalar Road,
Mampalam Junction, T.P 021 222 6821
Airyalai, Jaffna. 021 222 9141

(71134)

யாழ் தமிழ் மிஷன் சபை
418, நாவலர் வீதி,
மாம்பழம் சந்தி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா அருளம்பலம்



(முன்னாள் Accountant, The Jaffna Co-operative stores Ltd., A.Baur & Co.Ltd, Jaffna, Jaffna District Master Bakers Association, S.J.&B Trade Agency, முன்னாள் Director, Jaffna MPCS Ltd, முன்னாள் President, அரியாலை தெங்கு பனம்பொருள் கூட்டுறவு உற்பத்தி நிலையம், முன்னாள் இயக்குநர், அரியாலை அபிவிருத்திச் சங்கம்)

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அருளம்பலம் நேற்று (13.02.2008) புதன்கிழமை அதிகாலை வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற சதாசிவம் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், திலகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயந்திரன், ஜெயச்சந்திரன், ஜெயபாலன், ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சந்திரமாலா, சுஜாத்தா, ஷிரோமி, நேருஜி ஆகியோரின் மாமனும், இந்துஜா, லாவண்யா, பிரணவன், கஜானன், அனந்தன், நிலானி, பிரித்தினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (14.02.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தச்சனாங்குளம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல 588, நாவலர் வீதி,*
*அரியாலை.*
*19, வைரவர் கோவில் வீதி,*
*வைரவப்புளியங்குளம், வவுனியா.*
*தொ.பே. 0777701315*
*0212226691*

(சி/551461)

தகவல்:
அ.ஜெயபாலன்
(மகன் - முகாமையாளர்,
கொமர்ஷல் வங்கி, வவுனியா).

## தம்பு மயில்வாகனம்



அரியாலை, பூமகள் வீதியை பிறப்பிட மாகவும் உடுவில், இராமலிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு மயில்வாகனம் 12.02.2008 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பு தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி கதிரவேலு தம்பதியினரின் மூத்த மருமகனும் வட்சலாவின் அன்புக் கணவரும் மோபிக்கா (உடுவில் மகளிர் கல்லூரி), தேனுகான் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), வோசிந்தன் (ஸ்கந்தவரோதயா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரன், நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி அருள்பாலன் சத்தியாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.02.2008) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடை பெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்ய ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***இராமலிங்கம் வீதி,***
***உடுவில்.***

(71137)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சிவக்கொழுந்து பார்வதி



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கோண்டாவிலை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சிவக்கொழுந்து பார்வதி 12.02.2008 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னத்தங்கம் தம்பதியினரின் பாசமிகு மகளும், பொன்னையா, பரிமளம், ஜெயராசா, அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நேசராஜா, பத்மராஜா மற்றும் நவமலர் (கொழும்பு), புஸ்பமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், நேசமலர், சேனைத்துரை (கொழும்பு), ஜோபிறிற்றோ (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற றமேஸ்குமார், சிந்துஜா (ஆசிரியர், யாழ் இந்து மகளிர் கல்லூரி), ரஜிக்குமார், தனுஜா, கிருஷாந்தினி (கொழும்பு), டினேசினி (கொழும்பு), ஹரிகரன் (கொழும்பு), பற்றீசியா (பிரான்ஸ்), பற்றிக் (பிரான்ஸ்), பிரதீப் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாந்தகுமார், சுரேஸ்குமார் (செல்வா எலக்ரிக்கல்ஸ், திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.02.2008) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***கோண்டாவில் வடக்கு,***
***கோண்டாவில்.***

(71138)

தகவல்:
செ.செல்வரத்தினம்
(மைத்துனர்)

## சோமசுந்தரம் கணேஸ் (இலங்கைவங்கி, நெல்லியடி)

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கணேஸ் நேற்று (13.02.2008) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தங்கச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பண்டிதர் ஏரம்பமூர்த்தி (பருத்தித்துறை) தம்பதியரின் அன்பு மருமகனும், ஆனந்தியின் அன்புக் கணவரும், கீதா, ஜமுனா, மீரா ஆகியோரின் அன்புத் தந்தையும், குமரன், றகீதன் ஆகியோரின் அன்பு மாமனும், அட்சயனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***ஆத்தியடி, பருத்தித்துறை,***
*தொ.பே.0114981785*

தகவல்:
சோ.சிவலிங்கம்
(சகோதரன், கிராமஅலுவலர், அம்பன்)

(A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களைப் படையில் சேர்ப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குக!

## ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் ராதிகா

கொழும்பு,பெப்ரவரி14

''சிறுவர்களை ஆயுத மோதல்களிலும் துஷ்பிரயோகச் செயல்களிலும் ஈடுபடுத்துவோருக்கு எதிராக உறுதியான - இலக்கு வைக்கப்பட்ட - நடவடிக்கைகளை எடுங்கள்.''

- இவ்வாறு ஆயுத மோதல்களில் சிக்குண்டுள்ள சிறார்களின் நலன் தொடர்பான ஐ.நா. பொதுச் செயலாளரின் விசேட பிரதிநிதியான ராதிகா குமாரசுவாமி ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கோரியிருக்கின்றார்.

கொங்கோ, மியன்மார் (பர்மா), இலங்கை, உகண்டா உட்பட பல நாடுகளில் மோதல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் சிறுவர்களை ஆயுத மோதலில் ஈடுபடுத்துகின்றனர்; கொல்கின்றனர்; அங்கவீனர்களாக்குகின்றனர்; கடத்துக்கின்றனர். மற்றும் அவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை மறுக்கின்றனர் - என ராதிகா குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் ஐ.நா.பாதுகாப்புப் சபையின் பகிரங்க விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே அதில் கலந்துகொண்டு இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

சிறுவர்களை படையணிகளில் ஈடுபடுத்துவோர் மற்றும் துஷ்பிரயோகம் செய்வோருக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஆராயவும் மேற்பார்வை செய்யவும் பாதுகாப்பு சபையின் கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென அங்கு தெரிவித்த ராதிகா 58 இற்கும் மேற்பட்ட தரப்புகள் இவ்வாறான செயலில் ஈடுபட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

சிறுவர்களைப் படையணிகளில் சேர்க்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளிலுள்ள தலைவர்கள் மீது சர்வதேசப் பயணத் தடையை விதிக்கவேண்டும், அத்தகையோரை அரச கட்டமைப்புகள் எதிலும் இணைத்துக்கொள்ளக் கூடாதெனப் பணிப்புரை விடுக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இவர்களுக்கு மன்னிப்பு வழங்கக் கூடாது. அவர்களுக்கு எதிராக ஆயுதத் தடைகளை விதிக்க வேண்டும். நிதி வளங்கள் செல்வதையும் முடக்க வேண்டும் - எனவும் ராதிகா குமாரசுவாமி கேட்டுக் கொண்டார். (அ-உ)

# இலங்கையிலிருந்து 2 தமிழ் இளைஞர்களை லண்டனுக்கு நாடுகடத்த நீதிமன்று அனுமதி

கொழும்பு,பெப்.14

லண்டனில் கொலை மற்றும் கொலை முயற்சிக் குற்றங்கள் தொடர்பான இரு சந்தேக நபர்களை இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு நாடு கடத்துவதற்கு இலங்கை மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

சிவஜோதி ஆனந்தராஜ், சிவப்பிரகாசம் ராஜேஸ்கண்ணா ஆகிய இரு தமிழ் இளைஞர்களையே இங்கிருந்து நாடு கடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி உத்தரவு வழங்கியது.

கொலை, கொலை முயற்சிக் குற்றங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக இவர்கள் இருவரும் லண்டனுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தது.

இதையடுத்து, இவர்களை நாடு கடத்துவதற்கான விண்ணப்பத்தை சட்டமா அதிபர் ஊடாக மேல் நீதிமன்றத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு சமர்ப்பித்தது.

இந்நிலையில், இலங்கை வந்த ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரின் உதவியுடன் சிவஜோதி ஆனந்தராஜ் கைதுசெய்யப்பட்டார்.

நேற்று இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி உபாலி அபேரத்ன முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சிவப்பிரகாசம் ராஜேஸ் கண்ணா தாமாகவே நீதிமன்றில் ஆஜரானார்.

இருவரையும் விளக்கமறியலில் வைத்து, லண்டனுக்கு நாடு கடத்த அனுமதி வழங்க நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது. (சி)

## பொலன்னறுவையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் தாம் பொலனறுவையில் தங்கியிருப்பதற்கான சரியான காரணத்தை தெரிவிக்காமல் தங்கியிருந்தமையினாலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் கூறினார்.

## மணலாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8.30 மணியளவில் அடம்பன் நோக்கி முன்நகர்ந்த படையினர் மீது தீவிர தாக்குதலை நடத்திக் கடும் இழப்புக்களை ஏற்படுத்தினர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மண்கிண்டிமலைப் பகுதியில் நேற்று முன்தினம் பல முனைகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முன்நகர்வு நடவடிக்கையை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி முறியடித்தனர் என்று தெரிவித்துள்ளனர்.

மணலாறு அரியகுண்டான் பகுதியில் படையினரின் காவலரண்கள் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டன. பிற்பகல் 1.45 முதல் 2.15 மணி வரை இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## சமஷ்டி நோக்கியதான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இச்சந்திப்பு ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.

தற்போதைய அரசியல் நிலைமையில் வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. விமானப் படையினரின் தாக்குதலில் பொதுமக்கள் பலியாகி வருகின்றனர். விமானத் தாக்குதல்கள் புலிகளின் இலக்குகள் மீதே நடத்தப்படுவதாகக் கூறப்பட்ட போதிலும் இதனால் பொதுமக்களும் மாணவர்களுமே பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் கொண்டுவர விரும்பினால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமொன்றினை முன்வைக்க வேண்டும். அரசாங்கத்தினால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் 20 வருடங்களுக்கு முன்னரே தமிழர் தரப்பினால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும். அரசாங்கம் சமஷ்டியை நோக்கியதான தீர்வினை முன்வைக்கவேண்டும். இதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணமுடியும்.

தூதுக்குழுவினரின் கருத்துக்களை செவிமடுத்த அமெரிக்கத் தூதுவர், இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாட்டு நிலைமைகள் தொடர்பில் தூதுவர்களைச் சந்தித்து விளக்கி வரும் கூட்டமைப்பு இதுவரை இத்தாலி, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின தூதுவர்களையும் சந்தித்துள்ளது. (ஆ)

விரைவான விசேட கணனி வகுப்புகள்
(1) Visual Basic 6.0 (2) Web Designing
★ பாடசாலைகளில் அறிமுகமாகியுள்ள ICT பாடத்திட்டத்திற்கு அமைவானது (VB)
★ ஆசிரியர்களுக்கு, மாணவர்களுக்கு என இரு வேறுபிரிவுகள்
★ மைக்கொம்பியூட்டர் சஞ்சிகை ஆசிரியரின் நேரடி கற்பித்தல்
★ உதவிக் குறிப்புக்கள், செயன்முறைப் பயிற்சிகள்
★ கட்டணம் ரூபா 4000 மட்டும் (அனுமதிக் கட்டணம் இல்லை)
★ புதிய பிரிவுகள் ஆரம்பம் (முன்பதிவு அவசியம்)
வெள்ளி 15.02.2008 பி.ப. 3.30 மற்றும் 4.30
சனி 16.02.2008 காலை 8.00 பி.ப. 3.30
மாற்றுப்பாதை ஏற்பாடுகளுக்கு தொடர்புகொண்டு கேட்டறியவும்
Speed IT net 72/28,பனிக்கர் லேன், பலாலி வீதி, உயர்தொழில்நுட்ப நிறுவகம் அருகாமை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel:0214 591871, 0777 563 213 Web: www.speeditnet.com

## மனித உரிமைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்காமல் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றன என்று இலங்கை அரசு விசனம் தெரிவித்துள்ளது.

அரசிற்கு எதிரானவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டே இந்த அமைப்புகள் இவ்வாறு நடந்துகொள்கின்றன என்று அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே அவர் இப்படிக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் வன்முறை நடவடிக்கைகள் தற்போது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத புலிகள் அப்பாவிப் பொதுமக்கள் மீதே தாக்குதல் நடத்துகின்றனர்.

### பலமாக இருப்பதாகக் காட்ட முனைகின்றனர்

இத்தாக்குதல்கள் மூலம் தாம் பலமாகவே இருக்கிறோம் என்று புலிகள் நாட்டுக்குக் காட்ட முற்படுகின்றனர்.

அண்மைக்காலமாக கொழும்பு கொம்பனித்தெரு, கோட்டை ரயில் நிலையம், புத்தல, தம்புள்ள உள்ளிட்ட பல இடங்களில் பொதுமக்கள் பிரயாணம் செய்த பஸ்களை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தி அப்பாவிப் பொதுமக்களை அவர்கள் கொன்றுகுவித்துள்ளனர்.

அதேபோல் மன்னார் தள்ளாடியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின்மீதும் தாக்குதல் நடத்தி சமயத்தை அவமதித்துள்ளனர்.

புலிகள் கட்டுக்கடங்காது வன்முறை நடவடிக்கைகளை அடுக்கிக்கொண்டு போகின்றனர். அவற்றுள் ஒன்றையேனும் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புகள் இதுவரை கண்டிக்கவில்லை.

### புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன

இந்த அமைப்புகள் முற்றுமுழுதாக புலிகளுக்கு ஆதரவான வகையில் பக்கச்சார்பாகவே செயற்படுகின்றன.

அரசிற்கும், இந்த நாட்டுக்கும் எதிரானவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டே இந்த அமைப்புகள் இவ்வாறு நடந்துகொள்கின்றன.

மனித உரிமைகள் தொடர்பாக இந்த அமைப்புகள் கூறுவது எந்தப் பிரயோசனமுமில்லை. அவை கூறுவது எல்லாம் உண்மைதானா என்ற சந்தேகமும் இப்போது எழுந்துள்ளது. - என்றார் அவர். (அ-சி)

## தமிழருக்கு எதிரான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஒவ்வொரு பொலிஸ் பிரிவும் தன்தன்பாட்டில் - தன்னிச்சையாக - செயற்படுகின்றன என்றும் -

சட்டவிரோதமாகவும், மோசமான உரிமை மீறல் போக்கிலும் அவை நடந்துகொள்கின்றன என்றும்-

மனுதாரர் தரப்பு சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதியரசர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து இவ்விடயங்களை ஆராய்ந்து, உரிய வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு விசேட உயர்மட்டக்குழு ஒன்றை அமைக்குமாறு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

இக்குழுவில் நீதி அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபரின் பிரதிநிதி, பொலிஸ்மா அதிபரின் சார்பில் கொழும்புக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் மனுதாரர்களான இ.தொ.காங்கிரஸின் இரு பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

நீதிமன்றத்தின் இந்த வழிகாட்டுதல்கள் குறித்து பொலிஸ் மா அதிபருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் தகவல் தெரிவிக்கும்படியும் சட்டமா அதிபரின் பிரதிநிதிக்கு உயர்நீதிமன்றம் நேற்றுப் பணிப்புரை விடுத்தது.

இதேவேளை, ஏற்கனவே கைது செய்யப்பட்டு பூஸாவில் தடுத்து வைக்கப்பட்ட 92 தமிழ்க் கைதிகளில் 82 பேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று மனுதாரர் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

அவர்களை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும், இல்லையேல் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொள்ளும்படியும் நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

மனு மீண்டும் மார்ச் மாதம் நான்காம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-சி)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்குகின்றார்கள் என்றும், அந்தப் பத்திரத்தில் கொழும்பில் குறிப்பிட்ட திகதிவரை தங்கியிருக்கலாம் எனத் தெரிவித்து - இரண்டு, மூன்று மாத காலத்துக்கான - விஸா போன்ற அனுமதி பதியப்பட்டுள்ளது என்றும், அத்திகதிக்குப் பின்னரும் அந்த நபர் கொழும்பில் தங்கி நின்றால் அவர் கைது செய்யப்படுகின்றார் என்றும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

''இவ்வாறு பொலிஸாரிடம் போய் 'விஸா' அனுமதி பெற்றே தலைநகரில் தமிழர்கள் தங்கியிருக்கலாம் என்று வலியுறுத்தும் - சட்டவிரோதமான - நடைமுறை ஒன்றைப் பாதுகாப்புத்துறை, தமிழர்கள் மீது பலவந்தமாகத் திணிப்பது பெரும் உரிமை மீறலாகும்.'' - என்று நீதிமன்றில் வாதிட்டார் சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன். (அ-சி)

## இராணுவத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அரசியல் தீர்வைக் காண்பதற்கும் மக்களுக்கு துயரத்தையளிக்கும் யுத்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கும் சர்வதேச சமூகம் தனது செல்வாக்கைக் செலுத்த வேண்டும்.

### வரிவிலக்குச் சலுகை விலக்கப்படும்

மார்ச் மாதம் ஐரோப்பிய ஒன்றியக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும். இலங்கை அரசு இராணுவத் தீர்வை காணும் முயற்சியை தொடருமென்றால், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு குறைந்த வரியுடன் அல்லது வரியின்றி பொருள்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகையை விலக்கிக் கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பரிந்துரை செய்வேன்.

இலங்கை அரசுக்கு இது பொருளாதார அழுத்தங்களைக் கொடுக்கும். குறிப்பிட்ட விசேட சலுகை இலங்கையை பொறுத்தவரை இன்றைய நிலையில் 2008 வரை நடைமுறையிலிருக்கும். எனினும், அதற்கும் கூட அங்கு நல்லாட்சி நிலவுவது அவசியமாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் தற்போதைய நிலையைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளுமென்றால் இந்த வரிச்சலுகை அர்த்தமற்றதாகிவிடும்.

இலங்கை குறித்து கடந்த சில வாரங்களில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ள அமெரிக்காவுடனும் இது பற்றி நாம் ஆராய வேண்டியது அவசியம்.

பாதுகாப்பு நிலைமை காரணமாக இலங்கையில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத சூழல் உள்ளது. இதனால் கடந்த இரண்டு வருடங்களாக அந்த நாட்டுடன் எத்தகைய புதிய உடன்படிக்கைகளையும் நாம் செய்யவில்லை. ஏற்கனவே, ஆரம்பித்த திட்டங்கள் மட்டும் பூர்த்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

### ஐ.நா. பாதுகாப்புச் சபை இலங்கை விடயத்தை ஆராயவேண்டும்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை இலங்கை குறித்து ஆராய்ந்தால் சிறப்பாகவிருக்கும். எனினும், பாதுகாப்பு சபை தற்போதைய தருணத்தில் செயற்படுவது கடினம் போல தோன்றுகின்றது.

பாதுகாப்பு சபையின் முறைப்படியான தீர்மானம் இல்லாமலேயே ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் இலங்கைக்குத் தமது விசேட பிரதிநிதியொருவரை அனுப்ப முடியும்.

இலங்கையிலிருந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் வெளியேறிய பின்னர் அங்கு மனித உரிமை மீறல்களைப் பதிவு செய்வதற்கு எவருமில்லை. யுத்தம் மீண்டும் முழு வேகத்துடன் இடம்பெறுகின்றது.

ஆழிப்பேரலைக்கு பின்னர் இந்தோனேசியாவை விட இலங்கையே சமாதானத்தை விரைவில் எய்துமென பாரிய நம்பிக்கைகொண்டிருந்தேன்.

உலகம் முழுவதிலுமிருந்து பலர் பல முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் அது எதிர்பார்ப்பிற்கு மாறாக அமைந்துவிட்டது.

தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்குக் கிழக்கில் மேலும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளோம்.

இரு தரப்புகளும் இராணுவ ரீதியாகத் தீர்வை காணலாம் என கருதுகின்றன என்று நினைக்கிறேன். இது மேலும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளையே கொண்டு வரும் - என்றார் அவர். (உ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org